# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 புரட்டாதி 30 திங்கட்கிழமை (16-10-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:256


## புத்தகாயா புனரமைப்பு நிதி தமிழருக்கு எதிரான போருக்கு!

### சி.பி.ஐ. விசாரிக்கிறது

- சென்னையில் இருந்து உதயன் செய்தியாளர் -

சென்னை,ஒக்.16

புத்த காயாவிலுள்ள பௌத்த விகாரையைப் புனரமைப்புச் செய்வ தற்கென வெளிநாடுகளில் இருந்து கிடைத்த கோடிக்கணக்கான (இந் திய ரூபாவில்) பணம் - இலங்கை யில் தமிழருக்கு எதிராக நடத்தப் படும் போருக்கு நிதியாகப் போய்ச் சேருவதாகத் தெரியவந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து புத்த காயா விகாரையை நிர்வகிக்கும் மகா போதி சங்கத்துக்கு எதிராக சி.பி.ஐ. வழக்குத் தொடர்ந்து விசாரணை களை நடத்திவருகிறது.

மகாபோதி சங்கத்தின் நடவடிக் கைக்குழுவின் செயலாளரும் மகா விகாரை நிர்வாகக்குழு உறுப்பின

(10ஆம் பக்கம் பார்க்க)

## நுணாவிலில் சனியன்று படை அதிகாரி மரணம்!

நுணாவில் பகுதியில் உள்ள படையினரின் முன்னரங்க நிலைகள் மீது நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட மோட்டார் தாக்குதலில் ஓர் அதிகாரி உயிரிழந் தார்; ஐந்து படையினர் காயமடைந் தனர் என விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

அதே தினம் நுணாவில் பகு தியில் இடம்பெற்ற மற்றுமொரு சம் பவத்தில் விடுதலைப்புலிகள் உறுப் பினர் இருவர் உயிரிழந்ததாகவும் அந்நிலையம் தெரிவித்தது.

விடுதலைப்புலிகள் மோட்டார் மற்றும் சிறு ஆயுதங்கள் கொண்டு படையினர் மீது தாக்குதல் நடத்தி னர் என்றும் -

படையினர் பதில் தாக்குதல் நடத்தி அத்தாக்குதலை முறியடித் தனர் என்றும் -

விசேட ஊடகத் தகவல் நிலை யம் தெரிவித்தது. (உ-3-8-ரி)

# அரசு அமைக்கும் முயற்சியை ஐ.தே.க. இன்னும் கைவிடவில்லை

## தே.ஐ.மு. மற்றும் ஈ.பி.டி.பியுடன் நேற்றும் தொடர்ந்து பேச்சு

கொழும்பு,ஒக்ரோபர்16

**பொதுத்தேர்தலின் பின்னர் புதிய அரசு ஒன்றை அமைக்கும் தனது முயற்சியை ஐக்கிய தேசியக் கட்சி இன்னும் கைவிட்டுவிடவில்லை.**

**நேற்றும் அக்கட்சியின் உயர்மட்டத் தூதுக்குழுக்கள் ஆட்சி அமைக்கும் முயற்சியாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி மற்றும் முஸ்லிம் காங்கிரஸின் தேசிய ஐக்கிய முன்னணி ஆகியவற்றுடன் பேச்சுக்களில் ஈடுபட்டதாக அறியவந்தது.**

பொதுமக்கள் ஐக்கிய முன் னணி அரசைப் பதவியிறக்கி, ஆட்சி மாற்றத்துக்கு வழி சமைப்பதற்கு தாங்கள் உதவத் தயார் என்று ஜே.வி.பி., தமிழர் விடுதலைக் கூட் டணி, ரெலோ, தமிழ்க் காங்கிரஸ் ஆகிய தரப்புகளில் இருந்து சமிக்ஞை கிடைத்துள்ள பின்னணி யில் -

புதிய அரசை அமைக்கும் முயற் சியில் ஐக்கிய தேசியக் கட்சி தொடர்ந்தும் முழு மும்முரமாக ஈடு பட்டிருப்பதாக கொழும்புச் செய்தி கள் தெரிவிக்கின்றன.

(10ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சரவை பதவியேற்பு ஒத்திவைப்பு?

கொழும்பு,ஒக்.16

நாளைமறுதினம் நாடாளுமன் றம் கூடிய பின்பே அமைச்சரவை குறித்து முடிவு செய்யப்படும் என்று பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

முப்பது பேர் கொண்ட அமைச் சரவை இன்று பதவியேற்கும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் -

பிரதமரின் அறிவிப்பு நேற்று வெளியாகியுள்ளது.

இது விடயமாகப் பிரதமர் தெரி வித்துள்ளதாவது:-

"அமைச்சரவையில் யார் யாரை நியமிப்பது என்பது குறித்து எந்த

(10ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர்களை தெரிவு செய்வதில் இக்கட்டை எதிர்நோக்கும் ஜனாதிபதி

கொழும்பு,ஒக்.16

ஜனாதிபதி சந்திகா குமாரதுங்க வும் புதிய பிரதமர் ரத்னசிறி விக்கி ரமநாயக்கவும் சேர்ந்து புதிய அமைச் சரவையை அமைப்பது குறித்து ஆராய்ந்து வருகின்றபோதும் அதில் அவர்கள் பெரும் நெருக்கடியை எதிர்நோக்குவதாக கொழும்பில் அரசியல் அவதானிகள் தெரிவிக் கின்றனர்.

பொதுமக்கள் ஐக்கிய முன்ன ணியுடன் சேர்ந்து அரசு அமைப்ப தற்கு முன்வந்துள்ள ஈ.பி.டி.பி. மற் றும் தேசிய ஐக்கிய முன்னணி ஆகி யவை பல்வேறு அமைச்சுகளை வேண்டி நிர்ப்பந்தித்து வருவதாகக் கூறப்படுகின்றது.

(10ஆம் பக்கம் பார்க்க)

## கிளைமோர் பொருத்தியவர் உடல் சிதறிப் பலியானார்

மட்டக்களப்பு,ஒக்.16

கிளைமோர் குண்டை மரம் ஒன் றில் பொருத்தியவர் அது வெடித்த தில் அந்த இடத்திலேயே உடல் சிதறிப் பலியானார்.

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசமான பளுகாமம் பகுதியில் நேற்று அதிகாலை 3.30 மணியள வில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள் ளது.

புலிகள் அமைப்பின் முக்கிய பிரமுகர் ஒருவரைப் படுகொலை செய்யும் நோக்கத்துடன் இராணு வக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருக்கும் மேற்படி நபர் கிளை மோர்க் குண்டை எடுத்து வந்தார் என்று விடுதலைப் புலிகள் மட்டக் களப்பில் அறிவித்துள்ளனர்.

(உ-7-21)

## நாடாளுமன்றின் முதல் அமர்விலேயே அவசரகால நீடிப்புக் குறித்து விவாதம்

கொழும்பு,ஒக்.16

பதினொராவது நாடாளுமன்றத் தின் சம்பிரதாய பூர்வமான அமர்வு நாளைமறுதினம் புதன்கிழமை இடம் பெற்ற பின்னர் அன்றே அவசர காலச்சட்டத்தை நீடிக்கும் பிரே ரணை மீதான விவாதமும் இடம்பெற வுள்ளது.

நாடாளுமன்ற அமர்வு காலை 10 மணிக்கு இடம்பெறும் என முன் னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

சுபநேரத்தில் நாடாளுமன்ற அமர்வை நடத்த வேண்டும் என்று விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்து அன்று சுப நேரமான நண் பகல் 1.30க்கே நாடாளுமன்றம் கூட விருக்கின்றது.

(10ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தரப்பில் உயிரிழந்த 16 பேர்

வவுனியா,ஒக்.16

தொடரும் 'ஓயாத அலைகள் - 4' நடவடிக்கை மற்றும் இரு வெவ் வேறு சம்பவங்களில் தமது தரப்பில் உயிரிழந்த 16 பேரின் பெயர் விவ ரங்களை விடுதலைப்புலிகள் தமது "புலிகளின் குரல்" வானொலி மூலம் அறிவித்துள்ளனர்.

"ஓயாத அலைகள் - 4" நடவ டிக்கையில் உயிரிழந்ததாக அறி விக்கப்பட்ட 12 பேரின் பெயர் விவ ரம் வருமாறு:-

★ அலையமுதன் (சிவராசா தவச்செல்வன் - முல்லைத்தீவு)

★ முல்லை (திருநேசன் சசீந் திரன் - கிளிநொச்சி)

★ கனியவேலன் (தயாபரன் சுரேந்தர் - ஒட்டிசுட்டான்)

★ வித்தி (சிவபாலன் சிவானந்த ராசா - யாழ்ப்பாணம்)

★ கப்டன் முத்துவேல் (கந்தப்பு அருமார் - யாழ்ப்பாணம்),

★ சரணர் (சிவலிங்கம் சிவ மயில் - கிளிநொச்சி)

★ விழிக்கதிர் (இரத்தினசிங்கம் மலர்விழி - யாழ்ப்பாணம்)

★ தீட்செல்வி (பதுமநிதி முகுந்தா - கிளிநொச்சி),

★ தமிழ்மொழி (தேவராசா ஸ்ரீ ரஞ்சனி - கிளிநொச்சி)

★ 2ஆம் லெப்டினன்ட் கானரசி (சண்முகநாதன் சுபாஷினி - யாழ்ப் பாணம்),

(10ஆம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண பொ.ஐ.முவுக்கு 100 நாள் அவகாசம்!

### தேசிய ஐக்கிய முன்னணி விதிக்கிறது

கொழும்பு,ஒக்.16

புதிய அரசாங்கத்தை அமைப்ப தற்கு பொதுமக்கள் ஐக்கிய முன்ன ணிக்கு ஆதரவு வழங்க முன்வந் துள்ள கட்சிகளில் ஒன்றான முஸ் லிம் காங்கிரஸின் தேசிய ஐக்கிய முன்னணி இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கு நூறு நாள் அவ காசம் வழங்கியுள்ளது.

இனப்பிரச்சினைக்கான தீர்வு அடங்கிய அரசமைப்பு சீர்திருத் தத்தை பதவிக்கு வந்த நூறு நாள் களுக்குள் நிறைவேற்றாது விட்டால் அரசை கவிழ்த்துவிடுவோம் என்று தேசிய ஐக்கிய முன்னணி கண்டிப் பாக கூறியுள்ளதாக ஏஜென்ஸி செய்திகள் நேற்றுத் தெரிவித்தன.

பொ.ஐ.முவுக்கு ஆதரவு வழங்கு வது குறித்து ஜனாதிபதியுடன் பேச்சு நடத்திவரும் தேசிய ஐக்கிய முன்னணி தூதுக்குழு முன்வைத் துள்ள ஏனைய கோரிக்கைகள் வருமாறு:

★ 3 அமைச்சர் பதவிகளும் மூன்று தேசிய பட்டியில் உறுப்பினர் பதவிகளும் தவறாது வழங்கப்படல் வேண்டும்.

★ தேசியப் பட்டியல் உறுப

(10ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

ROTARACT CLUB

யாழ்.நகர் மைய றோட்டரக்ட் கழகம் நடத்தும்
க.பொ.த.(சா/தர) மாணவர்களுக்கான

## முன்மாதிரிப் பரீட்சை

★ பரீட்சைக்குரிய பாடங்கள் : கணிதம், விஞ்ஞானம், தமிழ்மொழியும் இலக்கியமும், ஆங்கிலம், வரலாறும் சமூகக்கல்வியும்.
★ பரீட்சைகள் : 27.10.2000 முதல் ஆரம்பமாகும்.
★ பரீட்சைக் கட்டணம் : ரூபா 100.00
★ விண்ணப்ப முடிவு திகதி : 23.10.2000

⇨ மாணவர்கள் தமது முழுப்பெயர், பாடசாலை, முகவரி, அடையாள அட்டை இலக்கம் போன்றவற்றைக் குறிப்பிட்டு தம் விண்ணப்பத்தையும் கட்டணத்தையும் பாடசாலையினூடாக எமது பிரதிநிதிகளிடமோ அல்லது 'அருண்ஸ் ஸ்போட்ஸ் ஸ்பொட்' கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலோ சேர்ப்பிக்கவும்.

⇨ தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் தனியார் கல்வி நிலையங்களின் ஊடாகவோ சுயமாகவோ விண்ணப்பிக்கலாம்.

⇨ மாவட்ட மட்டத்தில் நடத்தப்படும் இப் பரீட்சையில் முதன்மைச் சித்திபெறும் முதல் பத்து மாணவர்களுக்கு பெறுமதிவாய்ந்த பரிசில்களும், சித்தியடையும் சகல மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படும்.

⇨ பரீட்சைப் பெறுபேறுகள் 10.11.2000 இற்கு முன்னர் வெளியிடப்படும். தோற்றிய மாணவர்களுக்கு பரீட்சை சம்பந்தமான இலவசக் கருத்தரங்கும் நடத்தப்படும்.

⇨ பரீட்சை ஆலோசனைக் குழு:-

Rtn.அ.பஞ்சலிங்கம் (முன்னாள் அதிபர், யா/இ/க)
Rtn.வன்னியசிங்கம் (அதிபர், வைத்தீஸ்வராக் கல்லூரி)
Rtn.கப்டன் என்.சோமசுந்தரம் (முன்னாள் பிரதி அதிபர், யா/இ/க)

குறிப்பு: பரீட்சை நேர அட்டவனை, பரீட்சை நிலையங்களின் அமைவு என்பன பத்திரிகை வாயிலாகப் பின்னர் அறியத்தரப்படும்.

(C/13408) - செயற்திட்ட இயக்குநர்



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

பளை மத்திய கல்லூரி

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2000 சித்தியடைந்த மாணவர்கள்

| | | |
|---|---|---|
| S.அபிராமி | - | 151 |
| S.பிருந்தா | - | 147 |
| T.டக்ஸ்சன் | - | 142 |
| E.டினேஸ் | - | 135 |

மேற்படி மாணவர்களையும், கற்பித்த ஆசிரியர் பொ.செல்வநிதியையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர், பழைய மாணவர்கள்.

(79520)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/நாகேஸ்வரி வித்தியாசாலை, சுன்னாகம்.

2000 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர் விவரம்:-

| | | | புள்ளி | மாவட்ட நிலை |
|---|---|---|---|---|
| 1. | த.வைஷ்ணா | - | 174 | 18 |
| 2. | ஜெ.கூவானி | - | 158 | |
| 3. | தே.சம்யுக்தா | - | 152 | |
| 4. | செ.சிவதர்சனா | - | 149 | |
| 5. | மு.தரணிராம் | - | 138 | |
| 6. | அ.சயந்தன் | - | 135 | |

இம் மாணவர்கள் அனைவரும் சித்தியடைய ஊக்கமும் உறுதுணையாகவும் இருந்த அதிபர், ஆசிரியர்கள் அனைவரையும் உளமார வாழ்த்துகின்றேன்.

லயன் எஸ்.சிவரட்ணம் J.P (பழைய மாணவன்)

டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம். (79518)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

சிறந்த சமய, சமூகப்பணியாற்றி வருகின்றவரும், அரசாங்கத்தால் சமாதான நீதிவானாகக் கௌரவிக்கப்பெற்றவருமான

### திரு.க.வாமதேவன் J.P

அவர்களை மேலும் சமய சமூகப் பணிகளாற்றிப் பல்லாண்டுகாலம் வாழ எல்லாம்வல்ல வழக்கம்பரை ஸ்ரீ முத்துமாரி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

வழக்கம்பரை
சிவஸ்ரீ சுந்தரராஜக் குருக்களும்
தொல்புரம் அறநெறிப் பாடசாலை நிர்வாகஸ்தினர்களும்.

தொலைபேசி:-
உள்ளூர் - 070-212300
வெளிநாடு - 0094-70212300 (79517)



## கொடி தினம்

20.10.2000 - 20.11.2000

மக்கள் நலன்புரிச் சங்கத்தால் வருடா வருடம் நடாத்தப்பட்டும் கொடிதினமானது இவ்வருடமும் இடம்பெயர்ந்த மக்களின் சுகாதார, புனருத்தாபனம், கல்வி வசதிக்காகவும், சங்க வளர்ச்சிக்காகவும் நடத்தப்படுவதால் அனைவரது ஒத்துழைப்பையும் வேண்டிநிற்கின்றோம்.

'சிறுதுளி பெரு வெள்ளம்'

நிர்வாகம்
மக்கள் ந.பு.ச.

கொக்குவில். (79519)


# கண்டி தேர்தல் மோசடி தொடர்பாக
# வழக்குத் தாக்கல் செய்ய முயற்சி!

கொழும்பு,ஒக்.16

கண்டி,நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் இடம்பெற்ற தேர்தல் மோசடிகள் தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்ய சில அரசியல் கட்சிகள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளன.

வாக்காளர்கள் அச்சுறுத்தப்பட்டமை, வாக்காளர் அட்டைகள் பறிக்கப்பட்டமை போன்ற சம்பவங்களால் நீதியான தேர்தல் அங்கு இடம்பெறவில்லை எனத்தெரிவித்தே வழக்குத்தாக்கல் செய்ய முஸ்தீபு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இரு மாவட்டங்களில் இடம்பெற்ற வாக்களிப்பை ரத்துச்செய்து புதிதாகத் தேர்தல் நடத்தவேண்டும் என்று இந்த வழக்கில் கோரப்படவுள்ளது.

இந்த மாவட்டங்களில் நீதியாகவும், நியாயமாகவும் தேர்தல் நடத்தப்படவில்லை என்று தேர்தல் கண்காணிப்பாளர்களும் கருத்து வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஐ-3-20)

# மீன்பிடி உபகரணங்கள் 'குமண' கப்பலில் வந்தன

குருநகர்,ஒக்.16

வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் கொழும்பில் கொள்வனவு செய்யப்பட்ட 30 லட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் "குமண" கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்டு கோண்டாவிலிலுள்ள அரச களஞ்சியத்தில் வைக்கப்பட்டுள்ளன. இவை கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்கள் மூலம் மீனவர்களுக்கு விற்பனை செய்யப்பட உள்ளதாக வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத் தலைவர் சி.நவரட்ணம் தெரிவித்தார்.

(ஐ-51)

## தேர்தல் வன்செயல்களைத் தடுக்கத்தவறிய
# 25 பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை

கொழும்பு,ஒக்.16

நடந்து முடிந்த தேர்தலின்போது கட்சி சார்பாக செயற்பட்டதாகக் கூறப்படும் 25 பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப் பொலிஸ் தலைமையகம் முடிவு செய்துள்ளது. தேர்தலின்போது இடம்பெற்ற பல வன்முறைச் சம்பவங்களைத் தடுப்பதற்கு இவர்கள் தவறியுள்ளனர் எனத் தகவல்கள் கிடைத்துள்ளன என்றும்- இவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவிருக்கின்றது என்றும் - பதில் பொலிஸ் மா அதிபர் ஆனந்த ராஜா தெரிவித்தார். தேர்தலைத் தொடர்ந்தும் வன்முறைகள் இடம்பெற்று வருவதால் பொலிஸாரின் நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன என்றும்- ரோந்துப் பணிகள் மற்றும் தேடுதல்கள் இடம்பெறுகின்றன என்றும் - அவர் மேலும் கூறினார்.

(ஐ-3-20)

## மீனவர்கள் வழமைபோல் கடலுக்குச் சென்றனர்

குருநகர்,ஒக்.16

குடாக்கடலையண்டிய பகுதியில் தொழில் செய்யும் மீனவர்கள் நேற்றைய தினம் வழமைபோல் மீன்பிடிக்கப் படையினரால் அனுமதிக்கப்பட்டார்கள். நேற்றுமுன்தினம் இரவு 8.30 மணியளவில் மண்டைதீவையண்டிய பகுதிகளில் பலத்த துப்பாக்கிச் சத்தம் கேட்டதாகவும், கடலில் இருந்து ஏவப்பட்ட துப்பாக்கி ரவைகள் யாழ்.கோட்டையை அண்டிய கரையோரப் பகுதிகளை நோக்கிச் சென்றதைத் தாம் கண்டதாகவும் குருநகர் மக்கள் தெரிவித்தனர். இதனால் பொதுமக்களுக்கு எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை.

(ஐ-51)


## சைவ நற்பணி மன்றம்
## இலச்சினை (வரையும்) போட்டி

சைவநெறியில் எமது இளைஞர்களை வாழத் தூண்டுவது, சமூக உணர்வை அதிகரித்தல், சமூக சேவை செய்தல் என்பன எமது நோக்கம். ஆர்வமும் திறமையும் உள்ளவர்கள் எமக்கு ஏற்ற இலச்சினையை வரைந்து அனுப்பவும்.

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட இலச்சினைகளையும் வரைந்து அனுப்பலாம்.
★ 21.10.2000 சனிக்கிழமைக்கு முன் அனுப்பவும்.

தெரிவு செய்யப்படும் இலச்சினையை வரைந்தவருக்கு பரிசு வழங்கப்படும்.

முகவரி:
நாவலர் ஆச்சிரமம்,
66, கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

செயலாளர்
சைவ நற்பணி மன்றம்

(C/13410)



## புலமைப்பரிசில் 2001

6ஆவது பரீட்சை (உயர் புள்ளி)

| | | |
|---|---|---|
| * ந.திருத்தணிகன் | - | 183 |
| * சு.லஜிந்தன் | - | 179 |
| * நி.ஜனலக்சன் | - | 170 |
| * உ.பிரியங்கா | - | 162 |
| * ந.முகுந்தன் | - | 161 |
| * வெ.ஜெயபிரசாத் | - | 161 |

பரீட்சை வகுப்புகள் நேற்று ஆரம்பமாகிவிட்டன.

அனுமதிகள் பெறலாம்.

BOND யாழ்நகர் (79513)



## ராஜா
(யாழ்ப்பாணம்)

விஜய், ஜோதிகா, விஜயகுமார் மற்றும் பலரின் நடிப்பில்

### குஷி

காட்சிகள்:
10.30, 2.00 (பு.நே.)

(C/13401)



## நாகம்ஸ்
சுன்னாகம்

பிரசாந்த், ரம்பா, லிவிங்ஸ்டன், ராதாரவி நடித்த

### பூமகள் ஊர்வலம்

(புதியது)
காட்சிகள்: 11.00, 2.30 (பு.நே.)

(79494)



ROTARACT CLUB

யாழ்.நகர் மைய றோட்டரக்ட் கழகம் நடத்தும்
மாணவர்களுக்கான பொது அறிவு
நுண்ணறிவுத் தேடலுக்கான பரீட்சை - 3

மேற்படி பரீட்சைக்கான விடைகளை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி பலரின் வேண்டுகோளுக்கு இணங்க 23.10.2000 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மேலதிகமாக வினாத்தாள்கள் தேவைப்படும் பாடசாலைகள் உடனடியாகத் தொடர்புகொள்ளவும்.

(C/13409)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு
19
-
01
-
1935

உதிர்வு
16
-
09
-
2000

### திருநாவுக்கரசு குமாரவேற்பிள்ளை
(இளைப்பாறிய கண்காணிப்பாளர், கடதாசிக் கூட்டுத்தாபனம்)

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து எம்மைப் பாசத்துடன் வழி நடத்திய அன்புத் தெய்வமே! உங்கள் புன்முறுவல் பூத்த முகத்தைக் காண்போமா? உங்கள் ஆத்ம சாந்தியடைய விநாயகனை வேண்டுகின்றோம்.

இன்று (16.10.2000) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நிகழும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மைத்துனர்.

சித்தியார் வளவு,
கந்தரோடை,
சுன்னாகம். (79522)

# ஐ.தே.க. ஆட்சி அமைக்குமானால் யுத்தத்துக்கு முடிவு காணப்படும்

## டாக்டர் ஜெயலத் கூறுகிறார்

வவுனியா,ஒக்.16

ஐ.தே.கட்சி ஆட்சி அமைக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டால் தமிழ்மக்களுக்கு எதிராக நீண்ட காலமாகக் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்படும். நிரந்தர சமாதானம் ஏற்படும்.

இவ்வாறு தெரிவித்தார் டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தன.

வவுனியாவில் கடந்த வெள்ளியன்று பிற்பகல் இடம்பெற்ற செய்தியாளர் மாநாடு ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த பல வருடங்களாக நடைபெற்றுவரும் கொடிய யுத்தம் காரணமாக வடபகுதித் தமிழ் மக்கள் பெரும அழிவுகளைச சந்தித்துள்ளனர். இதனை நான் வன்னிக்கும் ஏனைய பகுதிகளுக்கும் நேரில விஜயம செய்தபோது கண்டேன்.

போரை முடிவுக்குக கொண்டுவரும் வகையில் எமது செயற்பாடுகளை நாம் விஸ்தரிக்கவுள்ளோம். இந்த வகையில் படையினரின் செயற்பாடுகளையும நாம் கட்டுப்படுத்துவோம்.

நாம் ஆட்சி அமைக்க ஆதரவு வழங்குவதாக ஜே.வி.பி. அறிவித்துள்ளது. ஜே.வி.பியின் கொள்கையும் எமது கொள்கையும் ஒன்றாக விருப்பதே இதற்குக் காரணம். ரெலோ அமைப்பிடம் இருந்தும் நாம் ஆதரவு கோரியுள்ளோம்.

மூன்றாந்தரப்பு மத்தியஸ்தம் மூலம் சமாதானப்பேச்சுக்கள் உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டுமென ரெலோ அமைப்பு எம்மிடம் வலியுறுத்திக் கேட்டுள்ளது. இதனை நாம் நிறைவேற்றியே தீருவோம்.

என்று டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தன மேலும் தெரிவித்தார்.

# இருபாலை கிழக்கு குடும்பங்கள் வீடுகளைச் சென்று பார்க்க அனுமதி

வலி.கிழக்கு,ஒக்.16

இருபாலை கிழக்கு பகுதியில் இருந்து வெளியேறிய மக்கள் தமது வீடுகளைச் சென்று பார்த்துவர கடந்த வாரம் முதல் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இருபாலை கிழக்கு விதானையார் ஒழுங்கை, குத்தினி, வசந்தபுரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சுமார் 150 குடும்பங்கள் அண்மையில் ஏற்பட்ட யுத்த நிலைமையால் இடம் பெயர்ந்து கொக்குவில், கோண்டாவில் பகுதிகளில் தங்கி இருந்தனர். இந்தப் பகுதிகளில் கடந்தசில மாதங்களாக [illegible] நிலை கொண்டிருந்தனர்.

தற்போது [illegible] வெளியேறியதை அடுத்தே வீடுகளைச் சென்று பார்க்க மக்கள அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

வசந்தபுரத்தில் [illegible] பாய் [illegible] பாடசாலை வரையான இடங்களுக்கு காலை 7 மணிக்கும் மாலை 5 மணிக்கும் இடையில் வீடுகளைச் சென்று பார்க்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(ஜ-180)



இருபாலை கிழக்குப் பகுதியில் இருந்து வெளியேறிய மக்கள் தமது இருப்பிடங்களைச் சென்று பார்க்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வசந்தபுரம் பகுதியில் இருந்த விக்னேஸ்வரா சனசமூக நிலையம் முற்றாகச் சேதமுற்றுக் காணப்படுகிறது. வீடுகள் பலவும் கூரையின்றியும் சேதமடைந்தும் உள்ளன.

*படங்கள்: பொ. இராஜேஸ்வரன்*

## வல்லிபுர ஆழ்வார் உற்சவத்தின்

# சமுத்திரத் தீர்த்தத்தில் பக்தர்கள் பங்குபற்ற அனுமதிக்கப்படவில்லை

வடமராட்சி,ஒக்.16

சரித்திரப் பிரசித்தி பெற்ற வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் வருடாந்த சமுத்திரத் தீர்த்த உற்சவத்தில் கலந்துகொள்ள பக்தர்களுக்கு இம்முறை அனுமதி வழங்கப்படவில்லை.

கடந்த வெள்ளிக்கிழமை மேற்படி ஆலயத்தின் சமுத்திரத் தீர்த்தம ஆலயத்திலிருந்து இரண்டுமைல் தொலைவிலுள்ள வங்களா விரிகுடாச் சமுத்திரத்தில் இடம்பெற்றது.

இதன்போது சுவாமி மற்றும் பரிவார மூர்த்திகளுடன் ஆலயத்தின் தொண்டூழியர்கள் சிலரும் மட்டுமே சமுத்திரத் தீர்த்தத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட்டது.

பக்தர்கள் எவரும் சமுத்திரத் தீர்த்தத்தில் பங்குபற்ற அனுமதி வழங்கப்படவில்லை. எனினும் சமுத்திரத்திலிருந்து எடுத்துவரப்பட்ட தீர்த்தம் ஆலயத்தின் முன்பாக வைத்து பக்தர்களுக்கு வழங்கப்பட்டது.

மேற்படி ஆலயத்தின் தேர், தீர்த்த திருவிழாக்களில் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள கலந்து கொண்டனர். வடபிராந்திய போக்குவரத்துச்சபை மற்றும் தனியார் சிற்றூர்திச் சேவைச் சங்கத்தினர் விசேட சேவைகளை ஒழுங்கு செய்திருந்தனர்.

(ஜ-7-139-173-15)



யாழ். பல்கலைக்கழகத்தின் புறநிலைப் படிப்புக்கள் அலகினால் வடமராட்சியில் உள்ள அதன் உப நிலையத்தில் முன்பள்ளி ஆசிரியர் பயிற்சிநெறியை நிறைவு செய்வதற்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஆங்கில விரிவுரையாளர் எஸ்.ரவீந்திரன் மங்கள விளக்கேற்றுவதையும், யாழ்.பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடாதிபதி எம்.நடராஜசுந்தரம் அருகில் நிற்பதை முதலாவது படத்திலும்-

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர் சட்டத்தரணி ஆர்.உருத்திராவிடமிருந்து கரவெட்டிப் பிரதேச முன்பள்ளி ஆசிரியர் சங்கத்தின் தலைவி செல்வி சிவகௌரி சிவஞானம் சான்றிதழைப் பெற்றுக்கொள்வதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

(இ-10-173)

*(படங்கள்: வடமராட்சி செய்தியாளர் எஸ்.தில்லைநாதன்)*

# அம்பாறையில் தெரிவான தமிழ் பிரதிநிதி அரசில் இணைவது பச்சைத் துரோகம்!

## ரெலோ கண்டித்து அறிக்கை

அம்பாறை மாவட்டத்தில் சுயேச்சைக்குழு - 2 இன் சார்பாகப் போட்டியிட்டு நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள ஈ.பி.டி.பி. உறுப்பினர் குணசேகரம்(சங்கர்) தற்போதைய சூழ்நிலையில் சந்திரிகா அரசுடன் இணைவது தமிழ் மக்களுக்குச் செய்யும் பச்சைத் துரோகமாகும்.

ரெலோ அமைப்பின உபதலைவர் ஹென்றி மகேந்திரன் விடுத்த ஓர் அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்திலிருந்து சுயேச்சைக்குழு2இன சார்பாக நாடாளுமன்றத்துக்குத தெரிவான திரு.குணசேகரம்(சங்கர்) பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் இணைந்து ஆதரவு அளிக்கப்போவதாக செய்திகள் வந்துள்ளன.

இது அம்பாறை மாவட்டத்து தமிழர் பிரதிநிதித்துவம எதற்காகப் பாதுகாக்கப்பட்டது என்ற ஒரு முக்கியமான கேள்வியை உருவாக்கியுள்ளது.

தமிழர் பிரதிநிதித்துவம் மூலம் தமிழர் நலன்களும், தமிழ் பேசும் மக்களின்தேசிய ஜனநாயக உரிமைகளும் வென்றெடுத்து உறுதிப்படுத்தப்படுவதற்காகவே தமிழர் பிரதிநிதித்துவம் அம்பாறையில் தேவைப்பட்டது என்று அத்தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களாகிய நாம் எல்லோரும் உணர்ந்திருந்தோம்.

தமிழ் பிரதேசத்திலே தற்போது நடக்கும கொடிய யுத்தத்தைத தொடரப்போவதாகவும், இனி தீர்வுப்பொதியோ, தீர்வுத் திட்டமோ இல்லை எனவும் பகிரங்கமாக உரக்கக் கூவும் ஒரு பிரதமரின் தலைமையில் உள்ள அரசே இதுவாகும்.

நம்மைத் துன்புறுத்தும் அவசரகாலச்சட்டம் நீடிப்பதற்கும், நமது மரபுவழித் தாயகமான இணைந்த வடக்கு - கிழக்கை துண்டு துண்டாக சிதைக்கவும் முயலும் சக்திகள் அனைத்தும் சேர்ந்துள்ளன. மற்றும் இந்த அரசில் சேர்வதானது தமிழ் பேசும் மக்களின் ஜனநாயக உரிமைகள் அனைத்தையும் சிதைத்து சீரழித்து அனைவரையும் நடைப்பிணமாக்கி அவமானப்படுத்திக் கொல்லும் திட்டமுடைய சக்திகளுடனும் கூட்டுச் சேர்வதுதான் என்று தெட்டத்தெளிவாக யாவருக்கும் நன்கு விளங்குகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் சந்திரிகா அரசுடன் கூட்டுச் சேர்வது என்பது தமிழ் மக்களுக்குச்செய்யும் பச்சைத் துரோகமாகும்.

கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்வதைவிட உடனடியாக சலுகைகளை விட உரிமைகளே முக்கியம் என நினைத்து திரு.குணசேகரம் அவர்கள் மக்களுக்கும் விசேடமாக அம்பாறை மாவட்டத்து தமிழ் மக்களுக்கும் துரோக மிழைப்பதில் நின்றும் தன்னைத் தவிர்த்துக் கொள்வாராக - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் பதவிக்கு ஜெனரல் சரத் முனசிங்க?

கொழும்பு,ஒக்.16

குருநாகல மாவட்டத்தில் இருந்து நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள முன்னாள் இராணுவப் பேச்சாளர் மேஜர் சரத்முனசிங்கவுக்கு பாதுகாப்பு பிரதி அமைச்சர் பதவி வழங்கப்படுமா?

அரசாங்க வட்டாரங்களில் இவ்வாறு கேள்வி எழுப்பப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொ.ஐ.முன்னணி அரசுக்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்கள் புதிய அமைச்சரவையில் அனுருத்த ரத்வத்தைக்கு பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் பதவி வழங்கப்படக கூடாது என்று நிபந்தனை விதித்துள்ளதாகவும்-

இதனை அடுத்தே மேஜர் ஜெனரல் சரத்முனசிங்கவிடம் அப்பதவியை ஒப்படைப்பது குறித்து அரச உயர் மட்டத்தில் ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும்-

அரசியல் வட்டாரங்களில் கடந்த சில தினங்களாகப் பேச்சடிபட்டு வருகிறது.

மேஜர் ஜெனரல் சரத்முனசிங்க அரசியலுக்குப் புதியவர் என்பதால் பொறுப்பு வாய்ந்த அமைச்சுப் பதவியை அவரிடம ஒப்படைக்கக கூடாது என்று அரச தரப்பில் சிலர் கருதுவதாகவும் கூறப்படுகிறது.

(ஐ-5)

# சில அமைச்சர்களை நீக்குமாறு நிபந்தனையேதும் விதிக்கவில்லை!

## ரவூப் ஹக்கீம் கூறுகிறார்

லண்டன்,ஒக்.16

புதிய அமைச்சரவையில் பழைய அமைச்சர்கள் சிலரை சேர்த்துக் கொள்ளவேண்டாம் என்று அரசுக்குத் தாங்கள் நிபந்தனை எதனையும் விதிக்கவில்லை என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இணைத் தலைவர்களில் ஒருவரான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

பி.பி.ஸிக்கு வழங்கிய பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அரசுக்கு இவ்வாறான நிபந்தனைகளை நாங்கள் விதித்ததாகப் பொய்ப்பிரசாரங்களை எதிர்க் கட்சி சார்பு ஊடகங்கள் வெளியிட்டு வருவதாக அறிகின்றோம். யாருக்கும் அமைச்சுப் பதவி கொடுக்க வேண்டாம் என்று கூறுகின்ற அநாகரிகமான அரசியலில் நாங்கள் ஈடுபடவில்லை.

இனப்பிரச்சினைக்குத தீர்வுகாணும் நோக்குடன் நோர்வே அரசு எடுத்துள்ள முயற்சிகள் தொடர்பாக நாங்கள் நோர்வே அரசுடன் விரைவில் பேச்சு நடத்தவுள்ளோம் - என்றும் அப்பேட்டியில் அவர் மேலும கூறினார்.

(ஐ-5)

## நினைவுப பேருரை

யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பேராசிரியர் சுப்பிரமணியம் வித்தியானந்தன் நினைவுப் பேருரை நடைபெறவுள்ளது.

'பண்டைய இலங்கையில் தமிழரின் உள் ஒழுங்கமைப்பு' எனும் தலைப்பில் பேராசிரியர் எஸ்.கே.சிற்றம்பலம் இந்தப பேருரையை நிகழ்த்தவுள்ளார்.

(ஜ-10)

## செய்முறைப் பரீட்சை

தென்மராட்சி,ஒக்.16

சாவகச்சேரி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த ஜி.சீ.ஈ சாதாரணதர மாணவர்களுக்கான செய்முறைப் பரீட்சைகள் நாளை மறுதினம் புதன் கிழமை காலை 8.30 மணிமுதல் கரவெட்டியில்உள்ள நெல்லியடி கல்வி நிலையத்தில் நடைபெற இருப்பதாக அதிபர் அறிவித்துள்ளார்.

(ஜ-117)

## வவுனியாவில் டிராக்டர் மீது தாக்குதல்

வவுனியா,ஒக்.16

வவுனியா மாவட்டம் - அடைப்பன் குளம் பகுதியில் படையினர் பயணம் செய்த உழவு இயந்திரம் மீது கடந்த வியாழன் பிற்பகல் 3.30 மணியளவில் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர் எனவும்-

இந்தத் தாக்குதலில் படையினர் தரப்பில் இருவர் படுகாயமடைந்தனர் எனவும் - வவுனியா படைத் தரப்பு அறிவித்தது.

(இ-7)

# வடமராட்சி கிழக்கு மீனவருக்கு நிவாரணம்

## விவரங்கள் பதியப்படுகின்றன

வடமராட்சி,ஒக்.16

வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் இருந்து இடம் பெயர்ந்த கடற்றொழிலாளர்களுக்கு மீனவர் நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

நாகர்கோயில் கிழக்கு, நாகர்கோயில் மேற்கு, மாமுனை, செம்பியன்பற்று வடக்கு, மருதங்கேணி, வத்திராயன், உடுத்துறை, ஆழியவளை, வெற்றிலைக்கேணி போன்ற இடங்களிலுள்ள கடற்றொழிலாளர்கள் தமது தேசிய அடையாள அட்டை மற்றும் 5ரூபா பெறுமதியான முத்திரையுடன் துன்னாலையில் இயங்கும் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில தமது பெயர் விவரங்களை பதிவு செய்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்றும் நாளையும், நாளை மறுதினமும் மூன்று நாள்கள் மேற்குறிப்பிட்ட அலுவலகத்தில் பதிவுகள் இடம்பெறவுள்ளன.

(ஜ-5-173)

# நால்வருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம்,ஒக்.16

கூரை ஓடுகள் திருடியதாக யாழ். பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட நான்கு சந்தேக நபர்களை எதிர்வரும் 25ஆம் திகதிவரை தடுப்புக் காவலில் வைக்குமாறு நீதிவான் இ.த.விக்னராஜா உத்தரவிட்டார்.

சஙரி குணசீலன், செல்வம் அன்ரனி,ஞானசீலன் அன்ரனி,மகாதேவன் மகேந்திரன்ஆகிய நால்வருமே தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# இரு முஸ்லிம் பெண்கள் நாடாளுமன்று செல்கின்றனர்

கொழும்பு, ஒக். 16

இலங்கை அரசியல் வரலாற்றில் முதன்முறையாக இரு முஸ்லிம் பெண்கள் நாடாளுமன்றத்துக்குச் செல்லவுள்ளனர்.

முன்னாள் அமைச்சர் அஷ்ரப் ஹெலி விபத்தில் உயிரிழந்ததை அடுத்து அவரது மனைவியான பேரியல் அஷ்ரப் திகாமடுல்ல மாவட்டத்தில் முதன்மை வேட்பாளராக நிறுத்தப்பட்டார். அவர் வெற்றிபெற்று நாடாளுமன்றத்துக்குச் செல்கின்றார்.

ஜே.வி.பி. அமைப்பு தனது தேசியப் பட்டியல் உறுப்பினராக மேல்மாகாண சபையின் ஜே. வி. பி. உறுப்பினரான அஞ்சனா உம்மாவை தெரிவு செய்துள்ளது.

அதேசமயம்—

தேசிய ஐக்கிய முன்னணிக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ள அமைச்சுப் பதவிகளில் ஒன்றை பேரியல் அஷ்ரப்புக்கு வழங்க அந்த முன்னணி முடிவு செய்துள்ளதாகவும்—

அவ்வாறு அவருக்கு அந்தப் பதவி வழங்கப்பட்டால் முதலாவது பெண் அமைச்சர் என்ற பெருமையை அவர் பெறுவார் என்றும்—தெரிவிக்கப்பட்டது

(இ-3)

## தபால் பெட்டியைக் காணவில்லை

வலிகாமம் தெற்கு, ஒக். 16

உடுவில்— மானிப்பாய் வீதியில் ஆனந்தா வீதிச்சந்தியில் மக்கள் பாவனைக்கு வைக்கப்பட்டிருந்த தபால் சேகரிக்கும் பெட்டி காணாமல் போயுள்ளது. இந்தச் சந்தியில் புதியதொரு தபால் பெட்டியை அமைத்து மக்களுக்கு வசதி செய்து தருமாறு மானிப்பாய் சுகாதார சமூக சுற்றாடல் விவகார சபையினர் யாழ். அஞ்சல் அலுவலக அத்தியட்சகரிடம் கோரியுள்ளனர். (ஐ-152)

# ஜனநாயகத் தீர்வுக்கே மக்கள் வாக்களிப்பு

## ஜோசப் எம்.பி. கூறுகின்றார்

கொழும்பு, ஒக். 16

"இனப்பிரச்சினைக்கு ஜனநாயக வழியிலான தீர்வே வேண்டும். இராணுவ ரீதியான தீர்வு அல்ல என்று வடக்கு - கிழக்கு மாகாண மக்கள் தேர்தல் மூலம் தெரியப்படுத்தியுள்ளனர்"— இப்படித் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

தேர்தல் முடிவு குறித்துக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இப்படிச் சொன்னார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த ஐவர் வடக்கு – கிழக்கில் வெற்றி பெற்றுள்ளனர்.

வடக்கு —கிழக்கு வாழ் மக்கள் இனப்பிரச்சினைக்கு ஜனநாயக வழியிலான தீர்வையே விரும்புகிறார்கள். இராணுவ ரீதியான தீர்வை அல்ல என்பதை இந்த வெற்றி எடுத்துக்காட்டுகின்றது.

எதிர்வரும் நாடாளுமன்றத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி எவ்வாறு செயற்படப் போகிறது என்பது குறித்து இன்னமும் முடிவு செய்யப்படவில்லை.

கொழும்பில் இன்று கூடும் அரசியல் குழு இது விடயமாக ஆராய்ந்து முடிவுகளை எடுக்கவிருக்கின்றது — என்றார் அவர். (உ-3)

## றிபேக் கல்லூரி ஆவணங்கள் மீட்பு

தென்மராட்சி, ஒக். 16

சாவகச்சேரி றிபேக் கல்லூரியில் இருந்த சில ஆவணங்கள் மீட்டுவரப்பட்டன.

கடந்த வெள்ளியன்று கல்லூரி அதிபர் மு. நாகேந்திரராசாவும் வேறு இருவரும் கல்லூரிக்குச் சென்று அங்கு இருந்த முக்கியமான ஆவணங்களை மீட்டு வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

ஷெல் வீச்சுக்களால் கல்லூரியின் கட்டடங்கள் பலத்த சேதமடைந்துள்ளதாகவும் பாடசாலை உபகரணங்கள் நாலாபுறமும் சிதறிக்கிடப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

# ஐ. தே. க. மூன்று தமிழர்களை தேசியப்பட்டியலில் நியமிக்கும்

கொழும்பு, ஒக் 16

ஐக்கிய தேசியக்கட்சியின் தேசியப் பட்டியலில் மூன்று தமிழர்களுக்கு இடமளிப்பது என்று அக்கட்சியின் உயர் பீடம் முடிவு செய்துள்ளது.

நேற்று முன்தினம் கூடிய கட்சியின் உயர் பீடம் மூன்று தமிழர்களுக்கும் இரண்டு முஸ்லிம்களுக்கும் ஏழு சிங்களவர்களுக்கும் தேசியப்பட்டியலில் இடமளிப்பது என்று முடிவு செய்துள்ளது,

யார் யாரை நியமிப்பது என்பது குறித்து அக்கட்சியின் உயர் பீடம் இன்று கூடி முடிவு செய்யும் எனத் தெரிவிக்கப்பட்டது.

தேசியப்பட்டியல் மூலம் ஐ தே கவுக்கு 12 ஆசனங்கள் கிடைத்துள்ளமை தெரிந்ததே. (உ-3)

# தேசிய பட்டியல் உறுப்பினர்களின் விவரங்களைத் தரக் கோரிக்கை

## உதவித் தேர்தல் ஆணையாளர் கடிதம்

கொழும்பு, ஒக். 16

தேசியப் பட்டியலில் இடம்பெறும் உறுப்பினர்களின் பெயர் விவரங்களை இன்று திங்கட்கிழமைக்குள் சமர்ப்பிக்குமாறு உதவித் தேர்தல் ஆணையாளர் கட்சிகளின் செயலாளர்களைக் கடித மூலம் கேட்டுள்ளார்.

தேர்தல் முடிவுகள் வெளியாகி ஒரு வாரகாலத்துக்குள் தேசியப் பட்டியலில் இடம்பெறும் உறுப்பினர்களின் பெயர் விவரங்கள் வெளியிடப்பட வேண்டும் என்றும்—

எனினும் நாடாளுமன்றத்தின் புதிய தொடர் ஆரம்பமாகவுள்ள நாளை மறுதினம் புதன்கிழமைக்குள் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர் விவரங்களை வர்த்தமானி மூலம் வெளியிடவேண்டியிருப்பதாலேயே இந்த அவசர வேண்டுகோளை விடுப்பதாகவும்—

உதவித் தேர்தல் ஆணையாளர் டி. சேனநாயக்க தெரிவித்துள்ளார். (உ-7-9)

# இந்து சமயத்துக்கு தனி அமைச்சு; இந்துமத குருபீடம் வலியுறுத்து!

கொழும்பு, ஒக். 16

பௌத்த சமய அலுவல்களுக்கென பௌத்தசாசன அமைச்சு இருப்பது போல புதிய அமைச்சரவையில்இந்து சமய கலாசாரத்துக்கும் தனியான அமைச்சு ஒன்று உருவாக்கப்படவேண்டும்.

சர்வதேச இந்து மதகுரு பீடம் இவ்வாறான வேண்டுகோள் ஒன்றை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் விடுத்துள்ளது.

இது தொடர்பான கடிதம் ஒன்றையும் சர்வதேச இந்து மதகுருபீடத்தின் தலைவர் ஸ்ரீஐயப்பதாசன் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் அரசாங்கத்தில் இந்து சமய, கலாசார அலுவல்களைக் கவனிக்கவெனத் தனியான அமைச்சுஉருவாக்கப்பட்டது.

அதேபோல் ஜனாதிபதி பிரேமதாசாவின் அரசாங்கத்திலும் இந்துசமய இராஜாங்க அமைச்சு உருவாக்கப்பட்டது. ஆனால் தங்களின் அரசாங்கம் ஆட்சிக்கு வந்த 1994 ஆம் ஆண்டு முதல் இந்து சமய இராஜாங்க அமைச்சு நீக்கப்பட்டு விட்டது. இது இந்துக்கள் மத்தியில் பெரும் அதிருப்தி நிலையைத் தோற்றுவித்துள்ளது.

தங்களின் அரசாங்கத்தில் இந்து, இஸ்லாம் சமயங்களின் அலுவல்களுக்கென திணைக்களங்கள் உருவாக்கப்பட்டுள்ள போதிலும் அவற்றுக்கு அதிகாரங்கள் வழங்கப்படவில்லை.

எனவே இதனைக் கருத்தில் கொண்டு புதிய அமைச்சரவையில் இந்து. இஸ்லாம் சமயங்களுக்கும் உரிய இடத்தை வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

—என்று அதில் உள்ளது.

இதேவேளை மேற்படி விடயம் தொடர்பாக சர்வதேச இந்துமத குருபீடத்தைச் சேர்ந்த குழு ஒன்று ஈ. பி. டி பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவை கொழும்பில் நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தியது எனவும்—

இந்து சமயத்துக்குத் தனியான அமைச்சு என்று இல்லாமல் விட்டாலும் "வடமாகாண அபிவிருத்தி, இந்து சமய, தமிழ் அலுவல்கள் அமைச்சு" என்னும் புதிய அமைச்சு ஒன்றை உருவாக்கித்தர தாம் முயற்சிப்பதாக டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ளார் எனவும்—

சர்வதேச இந்துமத குருபீடம் நேற்று விடுத்த பத்திரிகைச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-7)

## 110 குடும்பங்கள் தஞ்சம்

நெல்லியடி, ஒக். 16

தென்மராட்சிப் பகுதியில் இடம்பெற்றுவரும் யுத்த சூழ்நிலையினால் அங்கிருந்து வெளியேறியவர்களுள் 110 குடும்பங்களைச் சேர்ந்த 410 பேர் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் தஞ்சமடைந்துள்ளனர்.

வல்வெட்டித்துறை, வடகிழக்கு கிராம சேவை அலுவலர்பிரிவில்60குடும்பங்களும் கிராமக் கோட்டுச் சந்தியிலுள்ள புலோலி சினிமா தியேட்டரில் 11 குடும்பங்களும், துன்னாலை வடக்கில் 25 குடும்பங்களும், ஏனைய 14குடும்பங்களும் வடமராட்சியில் உறவினர், நண்பர்கள் வீடுகளில்தங்கியுள்ளன என்று பருத்தித்துறை பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் எம். தர்மலிங்கம் தெரிவித்தார்.

( ஐ — 109 )

## இளைஞர்களுக்கு பயிற்சி நெறிகள்

வலிகாமம் தெற்கு, ஒக். 16

யாழ். மாவட்ட இளைஞர்களுக்கான சுயதொழில் ஊக்குவிப்புப் பயிற்சித் திட்டத்தின் கீழ் பல பயிற்சி நெறிகளை முயற்சி நிறுவனத்தினூடாக இலவசமாக வழங்க அகதிகள் புனர்வாழ்வு நிறுவன திறன் விருத்திப் பகுதியினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்து கொண்ட மாணவர்கள் தொழில் கல்வியைப் பெற்றுச் சுயமாக தொழில் வாய்ப்பினைப் பெறும் பொருட்டு, தையல் இயந்திரம் திருத்துதல், தட்டச்சு இயந்திரம் திருத்துதல், நீர் இறைக்கும் இயந்திரம் திருத்துதல், வயறிங், றீவைன்டிங், றேடியோ, தொலைக்காட்சி திருத்தம் செய்தல், புத்தகம் கட்டுதல், தமிழ் தட்டச்சு பயிற்சி, ஆங்கில தட்டச்சு பயிற்சி, உடையமைத்தல், தமிழ் தட்டச்சு —சுருக்கெழுத்துப் போன்ற பல்வேறு பயிற்சிகளை இந் நிறுவனம்இலவசமாக வழங்கி வருகின்றது. ( ஐ — 152 )

## சமய சந்நிதிகளில்

கொழும்புத்துறை, ஒக். 16

சரித்திரப் பிரசித்தி பெற்ற தெல்லிப்பழை அருள்மிகு ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9. 30 மணியளவில் ஐப்பசி மாத சங்கிராந்தித் திருவிழா நடைபெறும்.

துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகளின் பஜனை, கூட்டுப் பிரார்த்தனையும் அங்கு இடம்பெறும்.

(ஐ—30)

# நான்கு அமைச்சர்கள் உட்பட 47 எம்.பிக்கள் தோல்வி!

## புதிய முகங்கள் 57 பேர்

கொழும்பு, ஒக். 16

முன்னைய நாடாளுமன்றத்தில் எம். பிக்களாக இருந்த நான்கு அமைச்சர்கள் உட்பட 47 பேர் கடந்த பொதுத் தேர்தலில் தோல்வியடைந்துள்ளனர்.

அவர்களில் 24 பேர் பொது மக்கள் ஐக்கிய முன்னணியையும்—

18 பேர் ஐக்கிய தேசியக் கட்சியையும்—

சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஐ. தே. கவில் இருந்து பிரிந்து பொது மக்கள் ஐக்கிய முன்னணியில் இணைந்த மூவரும் தோல்வியடைந்துள்ளனர்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் இணைந்து நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிட்ட இ. தொ. கா. உறுப்பினர்கள் மட்டுமே வெற்றி பெற்றனர். ஏனைய மாவட்டங்களில் போட்டியிட்ட இ. தொ. கா. வேட்பாளர்கள் சகலரும் தோல்வியடைந்துள்ளனர்.

புளொட் அமைப்பும் போட்டியிட்ட சகல இடங்களிலும் தோல்வியைத் தழுவிக் கொண்டது.

நாடாளுமன்றத்துக்கு 57 புதிய முகங்கள் இம்முறை வந்துள்ளனர். பெரும்பாலானவர்கள் ஐ. தே. கவில் இருந்தே வந்துள்ளனர்.

ஐ.தே.கவில் இருந்து 26 பேரும், பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் இருந்து 17 பேரும், ஜே.வி.பியில் இருந்து 9 பேரும் புதிதாக நாடாளுமன்றத்துக்கு வந்துள்ளனர். (உ-3-9)

## செய்முறைப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஒக் 16

வேம்பொடுகேணி சி. சி. த.க பாடசாலையில் இருந்து ஜி.சி.ஈ. (சா/த) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு சங்கீதம், விவசாயம், மனையியல் ஆகிய பாடங்களுக்கான செய்முறைப் பரீட்சைகள் எதிர்வரும் 20 ஆம் திகதி ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயத்தில் இயங்கும் வேம்பொடுகேணி சி.சி.த.க. பாடசாலையிலும் —

எதிர்வரும் 28 ஆம் திகதி நெல்லியடி ம.மகாவித்தியாலயத்திலும் — நடைபெறுமென பாடசாலை அதிபர் எஸ். இராமலிங்கம் தெரிவித்துள்ளார். (3-ரி)

# முகாம்களில் உள்ள சிறுவருக்கு தீபாவளியை ஒட்டி புத்தாடைகள்

## சைவ நற்பணி மன்றம் முயற்சி

யாழ்ப்பாணம், ஒக். 16

குடாநாட்டில் இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ள சிறுவர்களுக்கு தீபாவளியை ஒட்டி, புத்தாடைகளை வழங்க சைவ நற்பணி மன்றம் முடிவு செய்துள்ளது.

சைவ பரிபாலன சபையின் அனுசரணையுடன் இயங்கும் சைவ நற்பணி மன்றத்தின் விசேட கூட்டம் ஒன்றுநேற்று மாலை இடம்பெற்ற சமயம் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

முகாம்களில் தங்கியுள்ள சிறுவர்களுக்கும், வறுமைக் கோட்டுக்குக் கீழ் இன்னல் படும் சிறுவர்களுக்கும் தீபாவளியை ஒட்டிப் புத்தாடைகள் வழங்குவது என அந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இதற்காக இளைஞர்கள் அடங்கிய குழு வீடு வீடாகச் சென்று புத்தாடைகளைச் சேகரிக்கும் பணியை இன்று ஆரம்பிக்க விருக்கின்றது என்றும்—

அவ்வாறு வரும் இளைஞர்கள் குழுவிடம் பொது மக்கள்இயன்ற உதவியை வழங்கி இந்தப் பணிக்கு உதவவேண்டும் என்றும்—

மன்றப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

(உ-3)

# உதயன்

## அமைதிக்கு வாய்ப்புண்டா?

போரில் தமிழ்ப் பிரதேசங்களின் நிலங்களைக் கைப்பற்றி சம்பந்தப்பட்ட பகுதிகளை இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதனால், அரசியல் வெற்றி எதனையும் அடைந்துவிட முடியாது. பெரும் போர் புரிந்து நிலங்களைக் கைப்பற்றுவது அரசாங்கத்தின் நிலையை உயர்த்தும்; போரை வழிநடத்தும் அரசியல் வாதியின் மதிப்பையும் செல்வாக்கையும் உயர்த்தும்; அவ்வளவு தான்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்குப் பங்களிக்கக் கூடிய அமைதி வழியான திட்டங்கள் இல்லாவிடில் இராணுவ வெற்றியால் அரசியல் வெற்றி எதனையும் கண்டுவிட முடியாது.

இலங்கை அரசாங்கங்கள் கடந்த பதினேழு வருடங்களாக நடத்திவரும் போர் குறித்து இராணுவ ஆய்வாளர் ஒருவர் மேற்கண்டவாறு எழுதியுள்ளார்.

அதாவது புதிய அரசாங்கம் போரைத் தொடர்ந்து நடத்துவதாக இருந்தால், அதனோடு அமைதி வழித் திட்டங்களும் இணைந்திருக்க வேண்டும். வெறும் இராணுவ வெற்றியால் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது கடினம் என்பதனையே அவர் சொல்ல முனைந்திருக்கிறார்.

முன்னர் பதவியில் இருந்த சந்திரிகா அரசாங்கம், கடந்த ஐந்து வருடங்களாக — 1995 ஏப்ரல் மாதத்திலிருந்து — ''சமாதானத்துக்கான போரை''யே நடத்தியது. போரைத் தீவிரமாக நடத்தி, விடுதலைப்புலிகளை அழித்து அல்லது அடக்கிப் போரை முடிவுக்குக் கொண்டு வருவது; அதன் பின்னர் அரசியல் தீர்வு ஒன்றைக் கண்டு நாட்டில் சமாதானத்தையும் அமைதியையும் நிலைநாட்டுவது; என்பதே முந்திய அரசாங்கத்தின் அணுகுமுறையாக இருந்தது.

ஆனால் சமாதானத்துக்கான போர் என்ற அந்தக் ''கோட்பாட்டை'', தம்மை அழித்து அடக்கி, தீர்வு ஒன்றைத் திணிக்கும் அரசின் முயற்சியாகவே தமிழ் மக்கள் — அவர்களில் மிகப் பெரும்பான்மையினர் — கருதினர்.

அரசாங்கத்திடமும் விடுதலைப் புலிகளிடமும் நவீன ஆயுதங்கள் இருப்பதால் தம்மில் பலரே சண்டையில் சிக்கி அழியவும், தமது பிரதேசம் நாசமாக்கப்படவும் இந்த அர்த்த மற்ற ''கோட்பாடு'' வழி செய்யும் என்றும் தமிழ் மக்கள் நினைத்தார்கள். அதுவே உண்மையாக நடைபெற்றது. தென்மராட்சியில் அதனை நேரில் கண்டார்கள்; அனுபவித்தும் உணர்ந்தார்கள்.

போரை உடனடியாக நிறுத்த வேண்டும் என்ற தமிழர் தரப்புக் கோரிக்கைக்கு புதிய அரசு செவிசாய்க்கும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. அனேகமாக, முன்னரைப் போலவே, போரை ஒரு பக்கத்தாலும் அரசியல் தீர்வு முயற்சியை இன்னொரு பக்கத்தாலும் முன்னெடுக்கும் என்று நூறுவீதம் எதிர்பார்க்கலாம்.

அதனாலேயே இனப்பிரச்சினைக்கான தீர்வு இன்னும் ஐந்து வருடங்களில் காணப்படும் என்று ஆளுங்கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கால அவகாசம் விதிக்கப்பட்டுள்ளது. போருக்கு முன்னுரிமையும் சமாதானத்துக்கும் அமைதிக்கும் அடுத்த இடமும் அளிக்கும் திட்டங்களே தொடருமாயின், ஐந்து வருடங்களின் பின்னரும் சமாதானமும் அமைதியும் பிறக்கமாட்டா.

### மேற்காசிய மோதல்களைத் தடுக்க

# எகுட் பராக் மற்றும் யசீர் அரபாத் எகிப்தில் இன்று பேச்சுவார்த்தை

கெய்ரோ, ஒக். 16

மேற்குக் கரை மற்றும் காஸாப் பகுதிகளில் இஸ்ரேலியப் படைகளுக்கும் பலஸ்தீனர்களுக்கும் இடையே தொடர்ந்து இடம்பெற்று வரும் மோதல் சம்பவங்களைத் தடுத்து நிறுத்த இஸ்ரேலியப் பிரதமர் எகுட் பராக்கும் பலஸ்தீனத் தலை



பராக்

வர் யசீர் அரபாத்தும் இன்று எகிப்தில் சந்தித்துப் பேச்சு நடத்துகின்றனர்.

செங்கடல் ஓய்வுத் தலமான ஷரம் அல் ஷயித்தில் இடம்பெறும் இப் பேச்சுவார்த்தையில் அமெரிக்க அதிபர் பில் கிளின்ரனும் கலந்துகொள்வதாகக் கூறப்படுகிறது.

ஐ நா. செயலாளர் நாயகம் கோபி அனானின் தீவிர முயற்சியால் ஏற்பாடு செய்யப்பட்ட இப் பேச்சுவார்த்தையில்கலந்துகொள்ள இஸ்ரேலிய, பலஸ்தீனத் தலைவர்கள் நிபந்தனைகள் எதுவும் விதிக்கவில்லை.

இதே சமயம் யசீர் அரபாத் இப்பேச்சில் கலந்து கொள்வதற்குப் பலஸ்தீனத் தீவிரவாத அமைப்பான ஹமாஸ் கடும் கண்டனம் தெரிவித்ததுடன் பலஸ்தீனப் பகுதிகளில் கிளர்ச்சிகளை மேற்கொள்ளப் போவதாகவும் மிரட்டியுள்ளது.

பொலீஸ் துறை உட்பட நிர்வாக அதிகாரங்கள் பலஸ்தீனர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இஸ்ரேலியக் கட்டுப்பாட்டுப் பகுதிகளான மேற்குக்கரை மற்றும் காஸாவில் கடந்த சில வாரங்களாக இஸ்ரேலிய இராணுவத்தினருக்கும் பலஸ்தீனர்களுக்கும் நடந்துவரும் கடும் மோதல்



அரபாத்

களில் இதுவரை சுமார் 100 பலஸ்தீனர்கள் உயிரிழந்துள்ளனர். (ஒ-8)

## இஸ்ரேலியக் கேணல் கடத்தல்

இஸ்ரேலிய ராணுவத்தின் கேணல் ஒருவரைத் தாம் சிறைப்பிடித்துள்ளதாக ஹிஸ்புல்லா தீவிரவாத இயக்கத்தினர் அறிவித்துள்ளனர்.

மேற்காசியப் பிரச்சினைக்குச் சமாதான வழிகளை மறுத்துவரும் ஹிஸ்புல்லாக்களின் இந்த நடவடிக்கை, இன்று எகிப்தில் நடைபெறவுள்ள பேச்சுக்களைப் பாதிக்கலாம் என அச்சம் எழுந்துள்ளது.

## யப்பானில் பூமியதிர்ச்சி

ஜப்பானின் தலைநகர் டோக்கியோவிலும் கிழக்குப் பகுதி நகரங்களிலும் பூமியதிர்ச்சி ஏற்பட்டது.

5.2 ரிக்டேர் அளவைக் கொண்ட இந்தப் பூமியதிர்ச்சியால் ஏற்பட்ட உயிர் மற்றும் உடைமைச்சேதங்கள் குறித்து இதுவரை தகவல்கள் தெரிவிக்கப்படவில்லை.

## பலஸ்தீன மக்களுக்கு இந்தியா மருத்துவ உதவி

புதுடில்லி, ஒக். 16

மேற்குக்கரை மற்றும் காஸாவில் இஸ்ரேலியப் படையினருடன் ஏற்பட்ட மோதல்களில் படுகாயமடைந்த பலஸ்தீனர்களுக்கு உதவுவதற்காக 25 லட்சம் ரூபா பெறுமதியான மருந்துப் பொருள்களைச் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் மூலமாக இந்தியா அனுப்பி வைத்துள்ளதாக இந்திய வெளியுறவுத் துறைச் செயலர் ரவீந்தர்சிங் தெரிவித்துள்ளார்.

மேற்காசியப் பகுதியில் அமைதியை நிலை நாட்ட மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகளைக் காப்பாற்ற இந்தியா முன்வர வேண்டும் என்று வலியுறுத்தி இஸ்ரேலியப் பிரதமர் எகுட் பராக், பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத் ஆகியோர் தனித்தனியே இந்தியப் பிரதமர் வாஜ்பாய்க்கு கடிதங்கள் அனுப்பியுள்ளதாக ரவீந்தர் சிங் மேலும் தெரிவித்தார். (ஒ-8)

## கடத்தப்பட்ட விமானத்திலிருந்த அனைவரும் ஈராக்கில் விடுதலை!

பாக்தாத், ஒக். 16

ஜெட்டாவிலிருந்து லண்டனுக்குச் சென்று கொண்டிருந்த போது கடத்தப்பட்ட சவூதிஅரேபிய விமானம் ஈராக்கில் தரையிறங்கியதை அடுத்து விமானத்திலிருந்த 100 பயணிகளும், பணியாளர்களும் விடுதலை செய்யப்பட்டு லண்டனுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக பாக்தாத் விமான நிலையப் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர். அத்துடன் விமானத்தைக் கடத்திய 4 பேரும் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்கள் கூறினர்.

கடத்தப்பட்ட விமானம் பாக்தாத்தில் தரையிறங்கியவுடன், கடத்தல்காரர்களுடன் ஈராக்கிய போக்குவரத்து அமைச்சர் அஹமட் முர்தாக் அஹமட் பேச்சு நடத்தியதாகவும் அதனை அடுத்து பயணிகள் விடுவிக்கப்பட்டு கடத்தல்காரர்கள் கைதானதாகவும் கூறப்படுகிறது. கடத்தலைத் தடுத்த விதம் குறித்து எவ்வித தகவலும் தெரிவிக்கப்படவில்லை.

இதேசமயம் ஈராக்கில் தஞ்சம் கோருவதற்காகவே சவூதி அரேபியர்களான 4 பேரும் விமானத்தைக் கடத்தியதாக உறுதி செய்யப்படாத தகவல்கள் தெரிவித்தன. (ஒ-8)

## பிகாரில் 11 பேர் படுகொலை

பாட்னா, ஒக். 16

இந்தியாவின் பிகார் மாநிலம் திகார் மாவட்டத்தில் சமூக விரோதக் கும்பல் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 11 பேரை வெட்டிப் படுகொலை செய்துள்ளது.

வழிபாட்டுத் தலம் ஒன்றின் மீதான நிலத் தகராறே இந்தப் படுகொலைகளுக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது. (ஒ-8)

## தமிழகத்தில் தேர்தல்

சென்னை, ஒக். 16

தமிழகத்தில் எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெற உள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களில் 540 பதவிகளில் 79 பதவிகளுக்கான போட்டிகளில் எவரும் வேட்பு மனுத்தாக்கல் செய்யவில்லை என்று கூறப்படுகிறது. (ஒ)

### வீரப்பனிடம் தூது சென்றுள்ள

## நெடுமாறனை விமர்சிப்பதற்கு தமிழர் அமைப்புகள் கண்டனம்

சென்னை, ஒக். 16

சந்தனமரக்கடத்தல்காரன் வீரப்பனிடமிருந்து கன்னட நடிகர் ராஜ்குமாரை மீட்கும் முயற்சியில் பேச்சு நடத்தச் சென்றுள்ள குழுவில் பழ. நெடுமாறன் இடம்பெற்றுள்ளதை அரசியல் கட்சிகள் விமர்சனம் செய்வதற்குத் தமிழர் அமைப்புக்கள் கண்டனம் தெரிவித்துள்ளன.

சென்னையில் தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சிப் பொதுச் செயலாளர் மணியரசன், தமிழ்த் தமிழர் இயக்கத் தலைவர் சுப. வீரபாண்டியன், பெரியார் திராவிடக் கழகப் பொதுச் செயலாளர் 'விடுதலை' ராஜேந்திரன், தமிழர் தேசிய இயக்கத்தின் பொதுச் செயலாளர் பரந்தாமன் ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில்—

'மனித நேய அடிப்படையில் தமிழக, கர்நாடக மக்களிடையே நல்லுறவை ஏற்படுத்தப் பல அபாயங்களுக்குத் தங்களை உட்படுத்திக்கொண்டு இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ள பழ. நெடுமாறன், பேராசிரியர் கல்யாணி, சுகுமாரன் ஆகியோருக்குத் தீவிரவாத முத்திரை குத்திக் கண்டனம் செய்யும் தேசபக்தத் தலைவர்கள் காட்டுக்குள் சென்று வீரப்பனிடமிருந்து ராஜ்குமாரை மீட்கும் முயற்சியில் மேற்கொள்வதை யாரும் தடுக்கவில்லை. தாங்களும் செய்யாமல் முயற்சி செய்பவர்களையும் பழிக்கும் இவர்களின் போக்கை வன்மையாகக் கண்டிக்கிறோம்'

என்று கூறியுள்ளனர்.

வீரப்பனைச் சந்திக்கப் பழ. நெடுமாறனை அனுப்பியதன் மூலம் தமிழகத்தில் தீவிரவாதத்துக்கு உத்வேகம் கொடுக்கப்பட்டுள்ளதாக அ. தி. மு. க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா உட்படச் சில தலைவர்கள் கண்டித்திருந்தனர். (ஒ-8)

> **உதயவாக்கு**
>
> ஒவ்வொரு மனிதனின் இதயமும் நிசப்தமான நீதிமன்றமாகத் திகழ்கின்றது
>
> - ஓர் அறிஞர்

## நாளை

ஐப்பசி 1
செவ்வாய்க்கிழமை
திதி: சதுர்த்தி
முற்பகல் 10-21 வரை.
நட்சத்திரம்: ரோகிணி
பின் இரவு: 7. 37 வரை
சுபநேரம்: 10 32—12 02
ராகுகாலம்: 3.02—4.32
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## ஜஸ்வந்சிங்கின் சவூதிப் பயணம் பிற்போடப்பட்டது

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஸ்வந்சிங் நாளை மேற்கொள்ளவிருந்த 3 நாள்கள் சவூதி அரேபியப் பயணத் திட்டம் அந்த நாட்டின் வெளியுறவு அமைச்சரின் வேண்டுகோளுக்கு இணங்க திகதி குறிப்பிடப்படாமல் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## 13 இலங்கைத் தமிழ் அகதிகள் தனுஷ்கோடி சென்றடைந்தனர்

மதுரை, ஒக். 16

இலங்கையில் நடந்தநாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் தமிழ் அகதிகள் தமிழ் நாட்டுக்கு வருவது மீண்டும் அதிகரித்திருப்பதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இரவு மன்னாரிலிருந்து 7 குடும்பங்களைச் சேர்ந்த 13 அகதிகள் தனுஷ்கோடிக்கரைக்கு இரு படகுகள் மூலம் வந்து சேர்ந்ததாகவும், அவர்கள் அனைவரும் தற்போது சிறப்பு விசாரணை முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் மண்டபம் பொலீஸார் தெரிவித்தனர்.

இலங்கையில் நாடாளுமன்றத்தேர்தலின் பின்னர் ஆட்சி மாற்றம் எதுவும் ஏற்படாததால், நிலைமையில் மாறுதலை எதிர்பார்த்திருந்த தமிழர்கள் தற்போது மீண்டும் தமிழகத்திற்கு வரத் தொடங்கியிருப்பதாக பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## பாகிஸ்தானில் கோயில்கள் மீது தாக்குதல்

பாகிஸ்தானின் டல்பாண்டின் நகரில் இந்துக்களின் வீடுகள் மற்றும் கோயில்கள் வன்முறைக் கும்பல் ஒன்றினால் தாக்கிச் சேதப்படுத்தப்பட்டதற்கு இந்தியா கண்டனம் தெரிவித்துள்ளது. (ஐ)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## படிவம்

தொழில்நுட்பக் கல்லூரிகளின் அனுமதிக்கான விண்ணப்பம் 2001 ஆம ஆண்டு விற்பனையாகின்றது. படிவம் அளவு 13"x 8" விலை ரூபா 2.50. மொத்த வியாபாரிகளுக்கு கழிவு உண்டு. பாரதி ,430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 021-3081 (C/13321)

## தவறிவிட்டது

கந்தையா தணிகாசலம் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.462721773v) .விசேட அடையாள அட்டை என்பன தவறிவிட்டன.கண்டெடுத்தவர்கள் தயவு செய்து வசந்தம் புத்தக நிலையம், 405.ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். (79485)

## விற்பனைக்கு

Usha குளிர்சாதனப் பெட்டி, சிங்கர் தையல மெஷின், மரத்தளபாடங்கள், Dissecting Set, Switch Boards, Puller, சமையல் பாத்திரங்கள், சில்வர் பாத்திரங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: பார்வையிடும் நேரம் 3 p.m. பின், 39/1, இராசாவின் தோட்டம் றோட், யாழ்ப்பாணம். (வைரவர் கோவில் ஒழுங்கை) (79510)

## மணப்பெண் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1972 ஆம் ஆண்டு பிறந்த, அத்தம் 4 ஆம் பாதம்,செவ்வாய்க்குற்றமுள்ள, சொந்த வியாபார ஸ்தாபனத்தை நடத்தும , படித்த, உயர்குணம்மிக்க மணமகனுக்கு பெற்றோர் கல்வி அறிவுள்ள மண மகளை எதிர்பார்க் கின்றனர். தொடர்புகளுக்கு: விளம்பர இல. 1116, C/o உதயன். (79508)

## இலக்கியக் கட்டுரைகள்

O/L மாணவர்களே, அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் இலக்கியக் கட்டுரைகள் நூலை வாசித்தால் உங்களது விருப்பப் பாடமான தமிழ் இலக்கியத்தை நீங்களாகவே படிக்கலாம். சிறுகதைகள், நாடகங்கள், நாவல் எல்லாவற்றிற்கும் விமர்சனங்கள் எழுதப்பட்டுள்ளன. (79509)

## A/L பௌதிகவியல்

பௌதிகவியல், இணைந்த கணிதம் மிகச்சிறப்பாக பயிற்சிகள் பெற்று கற்பித்து வரும் ஆசிரியரினால் கற்பிக்கப்படும். மிகக் குறுகிய காலத்தில் ஏராளமான பயிற்சிகளுடன் முழுப்பாடத்திட்டமும் கற்பித்து முடிக்கப்படும். தனிப்பட்ட முறையிலும். தொடர்பு: தினசரி 3 மணிக்குப் பின்பு. R. பாலசுப்பிரமணியம் B.Sc. (Cey.) Dip. in-Ed. 17/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (79515)

## ராகிங்

யாழ்.மருத்துவபீட புகுமுக மாணவர்கள் 'ராகிங்' தொல்லைகளுக்கு உள்ளாகி வருவதாகக் கூறப்படுகின்றது.

மருத்துவபீட கன்ரீன் மற்றும் இடங்களில் இந்த செயற்பாடு கடந்த சில நாள்களாக இடம் பெறுவதாக அறியவந்தது. (இ-3)

## சைவ சமய அறிவு பரீட்சை

யாழ்ப்பாணம்,ஒக்.16

நீர்வேலி காமாட்சிஅம்பாள் இந்து பரிபாலன சபையினரால் வருடம் தோறும நடத்தப்பட்டுவரும் சைவ சமய அறிவுப் பரீட்சை நவம்பர் மாத நடுப்பகுதியில் நடத்தப்படவுள்ளது.

மேற்படி பரீட்சைக்கான விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் 25ஆம் திகதி ஆகும். (இ-7)

## சாரணர் பாசறை விழா

யாழ்ப்பாணம் ஒக்.16

காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தின் வருடாந்த, சாரணர் பாசறைவிழா எதிர் வரும் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிமுதல் தொடர்ந்து மூன்று நாள்கள் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி வளாகத்தில் நடைபெறும்.

குருளைச் சாரணர் வெளிக்கள நாள் நிகழ்வு 21 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 4.30 மணி வரை அங்கு நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-ரி)

## இளைஞர் காயம்

வவுனியா, ஒக்.16

துணுக்காய்-பாண்டியன்குளம் பகுதியில் கட்டுத்துவக்கு வெடித்ததில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்று முன்தினம் நண்பகல் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் தியாகராஜா விஜயகுமார(வயது 17) என்பவர் படுகாயமடைந்த நிலையில் மல்லாவி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். (ஐ-7)

## நலனோம்பு சங்கம்

தென்மராட்சி, ஒக்.16

தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்துள்ள மக்களின் நலன் கருதி இடம்பெயர்ந்தோர நலனோம்பு சங்கம் அங்குராப்பணம் செய்யப்பட்டுள்ளது.

சங்கத்தின் தலைவராக சிவஸ்ரீ கு. கிருபானந்தக்குருக்களும், செயலாளராக ப.வே. இராசரத்தினமும் தெரிவு செய்யப்பட்டனர். 11 பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது. (ஐ-117)

## லிங்கம் சில்க் ஹவுஸ் வழங்கும்

## மலிவு விற்பனை

| | | |
|---|---|---|
| 4 சாறிகள் | ரூபா | 960/- |
| சைனா ரவல் | ரூபா | 160/- |
| மாட்டின் சேட் (பெரியது) | ரூபா | 200/- |
| மாட்டின் சேட் (சிறியது) | ரூபா | 160/- |
| சேட்டிங் 1 மீற். | ரூபா | 90/- |
| செக் துணி 1 மீற். | | 75/- |
| 1 லென்ற் சூட்டிங் (இம்போட்டற்) | ரூபா | 200/- |
| 6 யார் ஸ்கேட் (இம்போட்டற்) | ரூபா | 275/- |

சிறுவர் ஆடைகள், வேட்டி, காற்சட்டை, வெள்ளைசாரம், ரங்குலர் துணி, சேட் வகைகள் இன்னும் பல.

*சொற்ப கையிருப்பே உண்டு தேவைகளுக்கு முந்துங்கள்!*

**லிங்கம் சில்க் ஹவுஸ்**

இல. 18, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (79506)

## அச்சகம் விற்பனைக்கு

உரிமையாளர் வெளிநாடு செல்லவிருப்பதால் யாழ். நகரில் நல்ல முறையில் இயங்கிக் கொண்டிருக்கும் அச்சகம், நஷனல் கலர் T.V, டொசியா டெக் ஆகியன விற்பனைக்குண்டு. தேவைப்படின் அச்சகம் இருக்கும் கட்டடமும் வாடகைக்கு கொடுக்கப்படும்.

விளம்பர இல. 1115

மே/பா உதயன், யாழ்ப்பாணம்.

(79504)

## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்மா, வாதநோய்கள், வலிப்புநோய், பீனிசம், தலையிடி, தலை, கால் அவியல், சரும நோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப் போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், விரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர்.

*சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்*

வேலணை

வைத்திய கலாநிதி

**சி. இராசரத்தினம்**

121, 2 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

*தொலைபேசி எண்: 2459*

(78954)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

2000 ஆம் ஆண்டில் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த

**செல்வன் வி.தீசன் – 138 புள்ளிகள்**

பெற்ற மாணவனை பாராட்டி வாழ்த்தி எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

**யா/நீர்வேலி தெற்கு இ.த.க. பாடசாலை**

(C/13406)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

முன்னாள் உபவேந்தர் பேராசிரியர்

**சுப்பிரமணியம் வித்தியானந்தன்**

## நினைவுப் பேருரை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதலாவது உபவேந்தரும், தமிழ் பேராசிரியருமாகிய சுப்பிரமணியம் வித்தியானந்தன அவர்களது நினைவுப் பேருரையை யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் சி. க. சிற்றம்பலம் அவர்கள் *'பண்டைய இலங்கையில் தமிழர் - ஒரு பன்முகப் பார்வை'* எனும் தலைப்பில் இன்று (16.10.2000) திங்கட்கிழமை மாலை 3.00 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நிகழ்த்துவார். இந் நினைவுப் பேருரை தமிழில் நடைபெறும்.

*ஆர்வலர்கள் அனைவரும் அழைக்கப்படுகின்றனர்.*

(C/13390) - துணைவேந்தர்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரா சுப்பையா கணகலிங்கம்**

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 16-05-1961 | 12-10-1999 |

திதி: 16–10–2000

மாதங்கள் பன்னிரண்டு மாயமாய்
மறைந்து ஆண்டுகள் ஒன்று ஆனதே!
உங்கள் அன்பும் பரிவும் பாசமும்
எமது நெஞ்சைவிட்டு அகலாது.

சு. புஸ்பராணி,
(மாமி)
*மாலிகாவத்தை,*
*சங்கானை.*

மனைவி, பிள்ளைகள்.
(சுவிஸ்)
சுவிஸ் தொலைபேசி - 021-6241872

(79512)

## வாடிக்கையாளர்களுக்கு எமது தீபாவளி வாழ்த்துக்கள்

## மலிவு விற்பனை

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு எமது வாடிக்கையாளர்களுக்கு ஒரு நற்செய்தி!

1. இரண்டாயிரம் ரூபா பெறுமதியான காஸ்குக்கர் ஒன்று ஆயிரம் ரூபா மட்டுமே!
2. எட்டுத் தேங்காய்களுக்குச் சமமான தேங்காய்ப் பால்மா ஒன்றின் விலை 95/- ரூபாவாகும். மலிவு விலையில் தேங்காய்ப் பால்மா பைக்கட் ஒன்றினை 80/- ரூபாவுக்கு நீங்கள் பெற்றுக் கொள்ளலாம்!!
3. 330 M.L. அளவுடைய கொக்கா கோலா ரின் சோடா ஒன்றின் விலை 22/- ரூபாய் மட்டுமே. இதை நீங்கள் மொத்தமாகப் பெற்றுக் கொள்ளலாம்!!!

*கையிருப்பு சொற்ப தொகைதான் இருப்பதால் உங்கள் தேவைகளுக்கு முந்திக் கொள்ளுங்கள்.*

**S.V.M.** P.V.T - LTD, 154, HOSPITAL ROAD, JAFFNA.

**S.V.M.** விஷேட விற்பனை நிலையம் சங்கானை வீதி, சண்டிலிப்பாய்.

**CITY AGENCY** 158, 160, STANLEY ROAD, JAFFNA.

(79503)

# நாட்டின் ஆட்சியைத் தீர்மானிக்கும் முக்கிய அரசியல் சக்தியாக ஈ.பி.டி.பி.

## மக்களுக்கு நன்றி தெரிவிக்கிறார் டக்ளஸ்

யாழ்ப்பாணம், ஒக. 16

இந்த நாட்டின் அரசாட்சியைத் தீர்மானிக்கும் தீர்க்கமான அரசியல் சக்தியாக ஈ.பி.டி.பி. தமிழ்பேசும் மக்களால் உருவாக்கப்பட்டுள்ளது.

ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டிருப்பவருமான டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அதில் தெவிக்கப்பட்டிருப்பதாவது: —

நடந்து முடிந்த பதினொராவது நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்ப்பேசும் மக்கள் ஈ.பி.டி.பி. கட்சிக்குத் தந்த காத்திரமான ஆதரவுக்குநாம் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நாம் யாழ். மாவட்டத்தில் நான்கு ஆசனங்கள் பெற்று அதன் அரசியல் தலைமையைக் கைப்பற்றியுள்ளதுடன் அம்பாறைமாவட்டத்தில் ஓர் ஆசனத்தை ஈட்டி அங்கு ஆபத்துக்குள்ளாகியிருந்த தமிழ் மக்களுக்கான அரசியல் பிரதிநிதித்துவத்தை ஈட்டிக் கொடுத்துமுள்ளோம்.

மக்கள் தமதுதிர்ப்பின்மூலம் தமிழ் மக்கள் ஓர் ஆளுமையுள்ள தலைமைத்துவத்தை நிலைநிறுத்த வேண்டிய காலத்தின் தேவையை நிறைவேற்றியுள்ளார்கள். அதனால் இன்று இந் நாட்டின் அரசாட்சியைத் தீர்மானிக்கும் தீர்க்கமான அரசியல் சக்தியாக ஈ.பி.டி.பி. தமிழ் பேசும் மக்களால் உருவாக்கப்பட்டுள்ளது.

அதனால் எமது கட்சியைக் கூட்டரசாங்கம் அமைக்க நாடவேண்டியதேவை ஆளும் கட்சிக்கு ஏற்பட்டுள்ளது — எமக்கு அதிகூடிய அதிகாரங்களுடனான அமைச்சொன்றையும் சில பிரதி அமைச்சர் பொறுப்புக்களையும் வழங்குவதற்கு ஆளும் கட்சி முன்வந்துள்ளது. இதை எமது மக்களுக்குக் கிடைத்த கௌரவமாகவே நாம் கருதுகிறோம். இது எமது இனிய மக்களின் விவேகமிக்க பேராதரவால் தான் சாத்தியமாகியுள்ளது.

இத்தகைய வரலாற்றுச் சந்தர்ப்பத்தையும் எமக்குக் கிடைத்துள்ள மக்கள் பலத்தையும் நாம் பொறுப்புணர்வோடும் விவேகத்தோடும் வினைத் திறனோடும் பாவித்து தமிழ் பேசும் மக்களுக்கு அர்த்த பூர்வமான அரசியல் தீர்வொன்றைக் காணவே முதன்மையாக உழைப்போம்.

அதேவேளை பல தசாப்த காலங்களாக அபிவிருத்தியேதுமின்றி முடங்கிப் போயிருக்கும் இத் தமிழ்ப் பிரதேசங்களை மேம்படுத்தவும் அங்குள்ள தமிழ் பேசும் மக்களின் ஒவ்வொரு சிறு நலனிலும் அக்கறையெடுத்து அவர்களின் குறைகளை நிவர்த்திக்கவும் அன்றாட தேவைகளை நிறைவு செய்யவும் நாம் உடனடிக் கவனம் செலுத்துவோம்.

அத்துடன் நில்லாது எம் மக்களுக்கான பாதுகாவலனாக நின்று அவர்களின் இன்னல்களுக்கு முகங்கொடுத்து உரிய நடவடிக்கைகளில் இறங்குவோம். எம் நாடாளுமன்றப் பிரதிநிதிகள் தெரிவான மாவட்டங்களில் மட்டுமன்றி சகல தமிழ் பேசும் பிரதேசங்களதுதேவைகளையும் பூர்த்தி செய்யும் வகையில் எமது சேவை பாரபட்சமின்றியும் நேர்மையாகவும் மிக வினைத்திறனுடனும் இருக்குமென்று நா(ம்) உறுதியளிக்கிறோம்.

உங்கள் ஆதரவுடன் மேன் மேலும் பலம்பெற்று எமது அரசியல் இலக்குகளை வெற்றி கொள்வோம் என்ற நம்பிக்கையுடன் இன்று எமது கரங்களைப் பலப்படுத்தியுள்ள தமிழ்பேசும் மக்களுக்கு எமது நன்றியை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறோம் நாம் என்றும் எமது மக்களோடிருப்போம்! — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# இன்றைய உதைபந்தாட்டம்

வலி. வடக்கு, ஒக். 16

யாழ்க் கல்வி வலய நல்லூர் கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலை அணிகளிடையேயான உதைபந்தாட்டப் போட்டியில் இன்று திங்கட்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

### 16 வயதுப் பிரிவில்

கால் இறுதி ஆட்டத்தில் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் எதிர் கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்.

### 18 வயதுப் பிரிவில்

கொக்குவில் இந்துக் கல்லூரி எதிர் செங்குந்த இந்துக் கல்லூரி.

கோண்டாவில் இந்துக் கல்லூரி எதிர் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்.

★ ★ ★

வலி. வடக்கு, ஒக். 16

யாழ். கல்வி வலய கோப்பாய்க் கல்விக்கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலை அணிகளிடையேயான உதைபந்தாட்டப் போட்டியில் இன்று திங்கட்கிழமை கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மைதானத்தில் பி. ப. 2-00 மணி முதல் இடம்பெறும் ஆட்டங்களில் கலந்து கொள்ளும் அணிகள் வருமாறு:-

### 16 வயதுப் பிரிவு

உரும்பிராய் இந்துக்கல்லூரி எதிர் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

புத்தூர் புத்தகலட்டி விஷ்ணு வித்தியாலயம் எதிர் இடைக்காடு மகாவித்தியாலயம்.

புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி எதிர் ஊரெழு கணேசா வித்தியாலயம்.

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி எதிர் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் (ஐ-86)

## குடிதண்ணீர் பெற வசதி

கொழும்புத்துறை, ஒக் 16

திருநெல்வேலி கலாசாலை வீதிப்பகுதியிலுள்ள அருள் மிகு ஸ்ரீ முத்து மாரியம்மன் கோவிலடி கிணற்றில் இருந்து மக்கள் தண்ணீரைப் பெற்றுப் பயன் அடைவதற்காக, நல்லூர்ப் பிரதேச சபை நீரிறைக்கும் இயந்திரம் ஒன்றைப் பொருத்தி உதவியுள்ளது.

[ஐ-30]

## வீதி திருத்தப்படும்

நீண்டகாலமாகப் புனரமைப்பு செய்யப்படாதிருக்கும் மானிப்பாய் அட்டகிரி வீதி புனரமைப்புச் செய்யப்பட உள்ளது.

இவ் வீதிப் புனரமைப்புக்குத் தேவையான பணத்தினை வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை தலைவர் வெலிச்சோர் அன்ரன் யோன்சன் ஒதுக்கீடு செய்துள்ளார். (ஐ-152)

# சித்த மருத்துவ நூல்கள் பிறநாட்டு மொழிகளிலும் வெளிவர வேண்டும்

## நூல் வெளியீட்டு விழாவில் உரை

நல்லூர், ஒக். 16

சித்த மருத்துவத்துறை குறித்து வெளிநாடுகளில் அறியப்படவில்லை. தமிழர்களுடன் மட்டும் நின்றுவிடாது வெளிநாடுகளில் உள்ளவர்களும் நன்கு அறிந்து கொள்ளக் கூடியதாகப் பிறமொழிகளிலும் சித்த மருத்துவத்துறை தொடர்பான நூல்கள் வெளிவர வேண்டும். சித்த மருத்துவத்துறையில் உள்ள நம்பிக்கை விடாமுயற்சி தந்தையார் மூலம் பெற்ற அனுபவங்கள் ஆகியவற்றைக் கொண்டு ஓர் அர்த்தமுள்ள நூலை வைத்திய கலாநிதி இராமநாதன் வெளியிட்டிருக்கிறார்.

'சித்த மருந்து முறையியல்' (Siddha Pharmacopoeia) நூல் வெளியீட்டு விழாவில் பேசிய யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் ப. கோபால கிருஷ்ண ஐயர் இவ்வாறு தெரிவித்தார்.

அகிலஇலங்கைஅரச சேவை சித்த ஆயுள்வேத வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் சார்பில் நாவலர் கலாசார மண்டபத்தில் சங்கத் தலைவர் வைத்திய கலாநிதி ஆர். கனகலிங்கம் தலைமையில் இந்த நூல் வெளியீட்டுவிழா நடைபெற்றது.

பேராசிரியர் கோபால கிருஷ்ண ஐயர் தமது உரையில் மேலும் கூறியதாவது:-

மேல்நாட்டு மருத்துவம், தொழில் நுட்பத்தில் நாம கொண்டிருக்கும் அக்கறையை எமது மருத்துவத்துறையில் காட்டுவதில்லை. தெய்வ சுத்தியுடன் சித்தர்கள் நமக்குத் தந்த மகத்தான சிந்தனை இது. நாம் எமது பாரம்பரியத்தைச் சிந்திப்பதில்லை. மேலை நாட்டில் மருத்துவம் பற்றிச் சிந்திக்கிறார்கள். 2500 வைத்தியர்கள் அமெரிக்காவில் ஒன்றுகூடி வைத்திய ஆய்வுகளை நடத்தி வைத்திய ஆலோசனை பெறாமல் அன்றியபற்றிக் மருந்துகளை உட்கொண்டால் அதனால் உடல் பாதிக்கப்படும் எனக் கண்டுள்ளனர். எனவே மருத்துவ ஆலோசனை இன்றி எதுவும் செய்யக் கூடாது. மேற்கு நாடுகளில் வைத்தியர்களின் சிபார்சு இன்றி மருந்துகளை வாங்க முடியாது. இங்கு நினைத்த மருந்தை சிபார்சின்றி வாங்கிக்கொள்ள முடிகிறது: இது தவறு.

மருத்துவத்திற்குத் தேவையானவை என்ன என்பதை இந்த நூலில் தந்துள்ளார் இராமநாதன். இதில் இடம் பெற்றுள்ள விடயங்கள் சர்வதேசமட்டத்தில் எமது மருத்துவத்துறை முக்கிய இடத்தைப் பெற வாய்ப்பளிக்கிறது. ஆங்கில மருந்துவத்திற்குச் சமனாக எமது மருத்துவத்துறையை முன்னெடுக்க வேண்டும் என்றார்—

### துணைவேந்தர்

யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை பேசும் போது கூறியதாவது:—

சித்த வைத்தியத்தில் உள்ள குறைபாடு வைத்தியவாகடம் என்ன என்று தெரியாததே. "வைத்தியமாத்தயாவிடம் குளிகை இருந்தது அது என்ன என்று தெரியவில்லை" என்று இனப்பிரச்சினை தொடர்பான அரசியல் தீர்வு பற்றிக் குறிப்பிடும்போது ஜே. ஆர். சொன்னார்.

அன்று இருந்த போட்டிகள் காரணமாக வைத்தியர்கள் தாம் அறிந்து வைத்திருக்கும் வைத்திய முறைகளை வெளியிடவில்லை. யாழ்.பல்கலைக் கழகம் இந்தத் துறையை வளர்த்தெடுப்பதில் அக்கறையுடன் செயற்படுகிறது. எனினும் இன்றைய பிரச்சினைகளால் கைதடியில் உள்ள எமது சித்த மருத்துவத் துறை மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. மாணவர்களுக்குத் தேவையான அனைத்துத் தேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளன. பிள்ளைகள் தங்குவதற்கென 150 லட்சம் ரூபாவில் கட்டப்பட்ட கட்டடம் பயனில்லாமல் போனது. காலம் பிழைத்து விட்டது.

1955 இல் அமைச்சர் திருச்செல்வம் முதல் தடவையாக யாழ்ப்பாணத்திலும் வெளியத்த பகுதியிலும்சித்த ஆயுள்வேத ஆஸ்பத்திரியை அமைத்தார். இன்று ஆஸ்பத்திரிகள் இல்லாத நிலை, மாநகர சபையும், உதவி உள்ளூராட்சி ஆணையாளரும் இதில் கவனமெடுத்து மாணவர்கள் வைத்தியப் பரிசோதனைகளில் ஈடுபடத்தக்க உதவிகளை வழங்க வேண்டும். இந்தக் கல்வியை முன்னெடுக்க இராமநாதனின் நூல் பயனுள்ளதாக அமைகிறது. கற்பித்தல் ஆய்வு செய்தல், வெளியிடுதல், சமூகத்திற்கு நற்பணி இந்த நான்கும் ஒரு விரிவுரையாளருக்குத் தேவை. இவை இராமநாதனிடம் உண்டு. இராமநாதன் தனது ஆய்வுகளை மேலும் விரிவுபடுத்த வேண்டும்— என்றார்

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சீ. வி. கிருஷ்ணசாமி, யாழ் பல்கலைக்கழக பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறைத் தலைவர் வைத்திய கலாநிதி திருமதி ஜீ. பவானி விரிவுரையாளர் பேராசிரியர்சு பவானி வைத்திய கலாநிதிகள் சீ. சபாநாதன், ஜ. ஜெயநாமகணேசன் நூலாசிரியர் இராமநாதன் ஆகியோரும் உரையாற்றினார்.

துணைவேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளையிடம் இருந்து நூலின் முதல் பிரதியைப் பேராசிரியர் சு. பவானி பெற்றுக் கொண்டார்.

(ஐ-111)

# சாவகச்சேரி கூ.சங்கத்தில்இருந்த பொருள்களைக் காணவில்லை

## மீட்டுவரச் சென்றோர் ஏமாற்றம்

தென்மராட்சி, ஒக். 16

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்த பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் காணாமற் போயுள்ளன. அத்துடன் ச(ங்க)த்தின் கிராமிய வங்கியின் இரும்புப் பெட்டகம் உடைக்கப்பட்டு அதற்குள் இருந்த பணம் திருடப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளியன்று சங்கத்தில் உள்ள பொருள்களை மீட்டுவரச்சென்ற சங்க உத்தியோகத்தர்கள் இத்தகவலைத் தெரிவித்தனர். சங்கக் களஞ்சியம், கூட்டுறவு மண்டபம் உட்பட அனைத்துக் கட்டடங்களும் ஷெல் வீச்சினால் சேதமடைந்துள்ளதாகவும் சங்கத்தினதும் கிராமிய வங்கியினதும் ஆவணங்கள் மற்றும் சில தளபாடங்களும் மீட்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

அத்தியாவசிய உணவுப் பொருள்கள், கட்டடப் பொருள்கள், புடைவை வகைகள் வாடகைக் கதிரைகள் உட்பட அனைத்துப் பொருள்களும் காணாமற் போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)

## செயற்பாட்டு அறை அமைப்பு

சண்டிலிப்பாய், ஒக். 16

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் புதிய கல்விச் சீர்திருத்த திட்டத்தின் பிரகாரம் செயற்பாட்டு அறையும், விவசாயகளமும் அமைக்கப்பட்டுவருகின்றன, 11 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுவரும் இவற்றின் கட்டட வேலைகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளதாக கல்லூரியின் அதிபர் கு. சண்முகநாதன் தெரிவித்தார்.

(ஐ 135)

# யுத்தத்தை நிறுத்தி பேச்சை ஆரம்பிக்க நடவடிக்கை எடுங்கள்

## ஜனாதிபதியிடம் இந்துப் பேரவை கோரிக்கை

கொழும்புத்துறை, ஒக். 16

தொடரும் யுத்தத்தை உடன் நிறுத்தி சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க உரிய நடவடிக்கை எடுக்கவும்.

இவ்வாறு கோரும் மகஜர் ஒன்றை வடபிராந்திய இந்துப் பேரவை நேற்று முன்தினம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு 'பக்ஸ்' மூலம் அனுப்பி வைத்துள்ளது.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தொடரும் பயங்கரமான யுத்தத்தினால் சொல்லொணாத்துயரங்களை அனுபவிக்கும் இலங்கை மக்களுக்கு — குறிப்பாக வடபகுதி மக்களுக்கு — விரைவில் நிரந்தர சமாதானம் கிடைக்க வேண்டும் நிரந்தரமான சமாதானச் சூழல் ஒன்று உருவாக வேண்டுமானால் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் இரு தரப்பும் யுத்த நிறுத்தம் செய்து சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும்.

ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிக காலத்தில் இந்து சமய கலாசாரத்துக்கென தனியான அமைச்சு ஒன்று இருந்தது. ஆனால் தங்களது ஆட்சியில் பௌத்த சமய கலாசாரத்துக்கு மட்டுமே தனியான அமைச்சு அமைக்கப்பட்டுள்ளது. இந்த நிலைமாறி இந்து சமய கலாசார அலுவல்களுக்கு எனத் தனியான அமைச்சு உருவாக்கப்பட வேண்டும்.

இந்துக்கள் சிறுபான்மையினராக வசிக்கும் மத்திய மாகாணத்திலும், ஊவாக மாகாணத்திலும் இந்துசமய கலாசாரத் திணைக்களங்கள் உருவாக்கப்பட்டுள்ளன .

இந்தத் திணைக்களங்கள் வடக்கு — கிழக்கிலும் ஆரம்பிக்கப்படல் வேண்டும் என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-7-30)

# ஆழக்கல்வியும் அகலக்கல்வியும்

# ஒன்றுசேரக் கற்பிக்கப்பட வேண்டும்

## அதற்கு ஒரு கல்லூரி அவசியம் என்கிறார் சொக்கன்

கொழும்புத்துறை, ஒக். 16

இன்று எமது கல்வி முறை ஆழக்கல்வி, அகலக்கல்வி என இரண்டு வகைகளில்— இரு திசைகளில் வளர்ந்து வருகின்றது. இவைஇரண்டும் இணைய வேண்டும். இதற்கென கல்லூரி ஒன்று ஆரம்பிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் வித்துவான் க. சொக்கலிங்கம் (சொக்கன்).

வட்டுக்கோட்டைத் தமிழ்ச் சங்கத்தின்ஏற்பாட்டில் அதன் பணிமனையில் கடந்த 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அமரர் இ. நமசிவாயதேசிகரின் நினைவஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே வித்துவான் சொக்கலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார். அஞ்சலிக் கூட்டத்துக்குப் புலவர் மணி அ. ஆறுமுகம் தலைமை வகித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது;—

பென்சிலின் ஏற்றுவதற்கு முன்னர் அது ஏற்றுபவருக்கு ஒத்துவருகின்றதா? எனச் சோதனை ஊசிபோட்டுப் பரீட்சிப்பது போலவே நமசிவாயதேசிகர் அவர்களும் மாணவர்களின் தகுதியை அறிந்தே கற்பிக்கும் ஆற்றல் படைத்தவர்.

இன்று எமது கல்வியில் ஆழக்கல்வி, அகலக்கல்வி என இரண்டு முறைகளும் இரு திசைகளில் வளர்ந்து வருகின்றன. ஆழக் கல்வியானது பண்டிதர் பரம்பரையினூடாகத் தமிழை மரபுவழியில் கற்று வருவதாகும். இவர்கள் ஏனைய பாடங்களில் புலன்களைச் செலுத்தாது தமிழை உயிரெனக் கருதித் தமிழையே கற்று வருபவர்கள். மற்றையது அரசாங்கப் பாடத் திட்டத்துக்கு அமையப் பாடசாலையில் கற்பிக்கப்படும் பரந்துபட்ட பல்துறைப் பாடங்கள் இதனையே அகலக் கல்வி முறை என்பர். இந்த இரண்டு முறைகளும்இணைய வேண்டும். இதற்காகக் கல்லூரி ஒன்று அமைக்கப்படுவதுடன் அங்கு பண்டிதர்களும், பட்டதாரி விரிவுரையாளர்களும் ஒன்றாக இணைந்து கல்வி கற்பிக்க வேண்டும்.

மகாவித்துவான் இ நமசிவாய தேசிகர் அவர்கள் கிணற்றுக்கு வெளியே நின்று உள்ளே இருந்தவர்களைத் தூக்கவில்லை. தாமும் கிணற்றுக்குள் இறங்கித் தூக்கியவர். மக்களோடு மக்களாக நின்று மக்களை உயர்த்தி விட்டவர். சாதாரண மக்கள் இலகுவில் அறிந்து கொள்ளும் வகையில் இலகுதமிழில் போதிக்கும் ஆற்றல் அன்னாருக்கு உண்டு.

இவ்வாறான மூதறிஞர் ஒருவரை இன்று நாம் இழந்துவிட்டோம். அவருடைய ஆத்ம சாந்திக்காக அவர் பணியைத் தொடர நாம் ஒரு கல்லூரியை நிறுவவேண்டும். இந்தக் கல்லூரி அரச அங்கீகாரம் பெற்று ஆழ, அகலக் கல்வியூட்டும் பயிற்சிக் கலாசாலையாகத் திகழ வேண்டும்.

இவ்வாறு வித்துவான் சொக்கன் மேலும் தெரிவித்தார்.

பண்டிதர்களான க. மயில்வாகனம், கி. பொன்னம்பலவாணர், வே முத்துலிங்கம் ஆகியோரும், செல்வி மீனலோசினி அருணாசலமும்உரையாற்றினர். வித்தகர் இயற்றிய வழிபாட்டுப் பாடலை ஆசிரியை திருமதி அ ஜெகதீஸ்வரி பாடினார். நன்றியுரையினை பண்டிதர் ம. ந. கடம்பேஸ்வரன் நிகழ்த்தினார்.

இந்த நினைவஞ்சலிக் கூட்டம் புலவர்மணி ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது.

(ஐ—7—30)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1913 | 2000 |
| — | — |
| 08 | 09 |
| — | — |
| 06 | 16. |

### திருமதி துரையப்பா பாக்கியம்

(யாழ்ப்பாணம் கிறன்ட்ஹோட்டல் உரிமையாளர், காலஞ்சென்ற வ. துரையப்பாவின் அன்பு மனைவி)

இன்று [16 - 10 - 2000] திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

— குடும்பத்தினர்

66, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். (79488)

நமோ! நாராயணா!

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 06 | 16 |
| — | — |
| 08 | 09 |
| — | — |
| 1928 | 2000 |

### திரு. பொன்னையா தியாகராசா

கடந்த 16 - 09 - 2000 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட சகலருக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (16 — 10 — 2000) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

= குடும்பத்தினர்

நீர்வேலி மத்தி,
நீர்வேலி. (79497)

## அலுவலகம் இடமாற்றம்

கொழும்புத்துறை, ஒக் 16

யாழ். குருநகர் கடற்கரை வீதியில் இயங்கி வந்த யாழ். நிறைவேற்று பொறியியலாளர் திணைக்களம் பாதுகாப்புக் காரணங்களுக்காகத் தற்போதுஓட்டு மடத்தில் இயங்கி வருகிறது. (ஐ-30)

## முதலமைச்சர் பதவிகள் காலி

நடந்து முடித்த பொதுத் தேர்தலில் போட்டியிட்ட மாகாணசபை முதலமைச்சர்கள் பலரும் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளதால் 5 மாகாணங்களில் புதிய முதலமைச்சர்கள் நியமிக்கப்பட உள்ளனர்.

சிரேஷ்ட மாகாணசபை உறுப்பினர்களை முதலமைச்சர் பதவிகளுக்கு பொது மக்கள் ஐக்கிய முன்னணி நியமிக்கும்.

(ஐ-9)

## ஒரே இரவில் வீடு, கடை உடைத்து பொருள்கள் சூறை

வலி. கிழக்கு, ஒக். 16

கல்வியங்காடு பகுதியில் அண்மையில் ஒரே இரவில் கடை, வீடு என்பனவற்றில் பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

கல்வியங்காடு 3 ஆம் கட்டைப்பகுதியில் உள்ளவர்த்தக நிலையம் ஒன்றின் முன் பக்கக் கதவினை உடைத்த திருடர்கள் உட்சென்று 15 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடிச் சென்றுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதே வேளை அதே இரவு அப்பகுதியில் முத்துமாரி அம்மன் ஆலய வீதியில் உள்ள கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் கல்வி பயிலும் வெளிமாவட்ட மாணவர்களது விடுதியின் கூரையைக் கழற்றி உட்சென்ற திருடர்கள் புதிய சைக்கிள் ஒன்றையும் சாறிகள் உட்பட உடுபுடைவைகளையும் திருடிச் சென்றுள்ளனர். இந்தத் திருட்டு நடந்த வேளை மாணவர்கள் வேறு வீடு ஒன்றில் தங்கியிருந்ததாகக் கூறப்படுகின்றது. (ஐ-180)

## கிராம அலுவலர்களை மக்கள் சந்திப்பதற்கு ஏற்பாடு

தென்மராட்சி, ஒக். 16

தென்மராட்சிப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்து வலிகாமம், வடமராட்சி ஆகிய பகுதிகளில் தங்கியுள்ள மக்களின் நலன்கருதி திங்கள், வெள்ளி ஆகிய நாள்களில் பிரதேச செயலகத்தில் கிராம அலுவலரைச்சந்திக்கஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

பிரதி திங்கட்கிழமைகளில் வலிகாமம் பகுதியில் தங்கியுள்ள கிராம அலுவலர்கள் நெல்லியடியில் இயங்கும் பிரதேச செயலக உப அலுவலகத்திற்கும் சமுகமளித்து மக்களின் பிரச்சினைகளை கேட்டறிவர்.

பிரதி வெள்ளிக்கிழமைகளில் வலிகாமத்திலுள்ள கிராம அலுவலர்கள் நெல்லியடி உப அலுவலகத்திற்கும், வடமராட்சியில் உள்ள கிராம அலுவலர்கள் இணுவிலில் உள்ள பிரதேச செயலகத்திற்கும் வருகை தந்து மக்களைச் சந்திக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

(ஐ-117)

## இலவச மருத்துவ சேவை

பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரமத்தின் அனுசரணையுடன் டாக்டர் எஸ் யோகேஸ்வர தேவரினால் போர் அனர்த்தங்களால் இடம்பெயர்ந்த மக்களுக்கு இலவச மருத்துவ சேவை நடத்தப்பட்டு வருவதாக சேவாச்சிரமத்தின் பொதுச் செயலாளர் சுவாமி சிச்ரூபானந்தா தெரிவித்தார்.

(ஐ-30)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/கோண்டாவில்

### இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்

2000 ஆம் ஆண்டில் 5 ஆம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த

J பிரதீபன் — 149 B. மதுஷனா — 148
K. சுதர்சன் — 135

ஆகிய மாணவர்களைப் பாராட்டுவதுடன் இவர்களை வழி நடத்திய அதிபர், ஆசிரியர்களையும் உளமார வாழ்த்துகின்றோம்.

பழைய மாணவர் சங்கத்தினரும்,
ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர்
சன சமூக நிலையத்தினரும்.

(79514)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### யா/யாழ்ற்ரன் கல்லூரி

காரைநகர்

### ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2000

சித்தி பெற்ற மாணவர்கள்

1. செல்வன் தே. செந்தூரன் — 146
2. செல்வி சே. கமலவாசினி — 144
3. செல்வி ஆ. வளர்மதி — 143
4. செல்வன் தி. சேந்தன் — 141
5. செல்வி ம. சாம்பவி — 141
6. செல்வன் க. திவாகரன் — 139
7. செல்வி இ. சுகன்யா — 136

மேற்படி மாணவர்களையும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களையும் பாராட்டுவதுடன் எமது பிள்ளைகள் சித்தி பெறுவதற்கு வழிகாட்டிய அதிபர், கற்பித்த ஆசிரியர்கள் அனைவரையும் பாராட்டிப் பெருமகிழ்வெய்துகிறோம்.

1990 இல் இருந்து அங்கீகரிக்கப்பட்ட தெரிவுப் பாடசாலையாக இருந்துவரும் எம் கல்லூரி இப் பரீட்சையில் தீவக வலயத்தில் முதலாம் இடம் பெற்றமையையும் பாராட்டுகின்றோம்.

— பெற்றோர்.

யா/ யாழ்ற்ரன் கல்லூரி
காரைநகர். (79505)

# போஷாக்கு கல்வி கருத்தரங்குகள்

வலிகாமம் தெற்கு,ஒக்.16

போஷாக்கு கல்வி பற்றிய கருத்தரங்குகள் வலிகாமம் தெற்கு பிரதேச செயலாளர் பிரிவில் இன்று முதல் நடைபெற உள்ளன.

இப்பிரதேச செயலர் பிரிவின் திட்டமிடல் பிரிவினரால் இணுவில், குப்பிளான், உடுவில் வடக்கு, உடுவில் மத்தி, கந்தரோடை கிராம அலுவலர் பிரிவுகளில் கருத்தரங்குகள் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

வயது வந்தோர்களுக்கான போஷாக்கு நிகழ்ச்சி திட்டம், தாய்மாருக்கான கருத்தரங்குகள், முன்பள்ளி ஆசிரியைகள், தாய்மார்களுக்கான கருத்தரங்குகள், பாடசாலை மாணவர்களுக்கான கருத்தரங்குகள்,இளைஞர்களுக்கான போஷாக்கு கல்வி நிகழ்ச்சித் திட்டம், கிராமிய போஷாக்கு நிகழ்ச்சித் திட்டம், அரசசார்பற்ற நிறுவன ஊழியர்களுக்கான கருத்தரங்குகள். நிகழ்ச்சித் திட்டம், அரசசார்பற்ற நிறுவன ஊழியர்களுக்கான கருத்தரங்குகள் என்பன போன்ற பல கருத்தரங்குகள், நிகழ்ச்சித் திட்டங்கள் நடைபெறவுள்ளன.

வலிகாமம் தெற்கில் பின்வரும் நிகழ்சி ஒழுங்கில் குறிப்பிட்ட இடங்களில் போஷாக்குக்கல்விக் கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன.

* வயது வந்தோருக்கான (பெண்கள்) போஷாக்கு நிகழ்ச்சித் திட்டம் - கந்தரோடை தமழ்க்கந்தையா வித்தியாசாலையில் இம்மாதம் 16,17,18,19,20,25,27 ஆம் திகதிகளிலும் நவம்பர் 2,3ஆம் திகதிகளிலும் நடைபெறும்.

* பாடசாலை மாணவர்களுக்கான போஷாக்கு கல்வி கருத்தரங்கு குப்பிளான் விக்கினேஸ்வர வித்தியாலயத்தில் இம்மாதம் 30ஆம் திகதி நடைபெறும்.

* தாய்மார்களுக்கான போஷாக்குக்கருத்தரங்கு இணுவில் இந்துக் கல்லூரியில் இம்மாதம் 21ஆம் திகதி நடைபெறும்.

* முன்பள்ளி ஆசிரியைகள், தாய்மார்களுக்கான - கருத்தரங்கு - இம்மாதம் 29ஆம் திகதி உடுவில் வடக்கு மான்ஸ் மகாவித்தியாலத்தில் நடைபெறும்.

* இளைஞர்களுக்கான போஷாக்கு கல்விக் கருத்தரங்கு நவம்பர் மாதம் 4ஆம் திகதி உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலையில் நடைபெறும்.

* அரசசார்பற்ற நிறுவன ஊழியர்களுக்கான போஷாக்கு கருத்தரங்கு வலிகாமம் தெற்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நவம்பர் மாதம் 7ஆம் திகதி நடைபெறும். (ஐ-152)

## மூளைக்காய்ச்சலால் சிறுமி மரணம்

யாழ்ப்பாணம்,ஒக்.16

மூளைக்காய்ச்சல் நோயினால் பீடிக்கப்பட்டு நேற்றுமுன்தினம் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட 3 வயதுச்சிறுமி அன்றையதினமே அங்கு உயிரிழந்தார். மல்லாகம் கல்லாரையைச் சேர்ந்த வர தராசா யசோதா (வயது 3) என்ற சிறுமியே மரணமானவராவார். மரண விசாரணையின்பின் சடலம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஐ-15)

## அதிபர்க ர் கூட்ட

கொ . தவில்,ஒக்.16

யாழ்.வலயப் பாடசாலை அதிபர்களுக்கான விசேட கூட்டம் நாளை மறுதினம் புதன்கிழமை யாழ். வலயக் கல்வித் திணைக்கள மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

தரம் 1 ஏபி, தரம் 1 சி ஆகிய இருவகைப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் முற்பகல் 9 மணிக்கும்- தரம் 3 வகைப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் முற்பகல் 11.30 மணிக்கும் நடைபெறும். இக்கூட்டத்தில் பல முக்கிய விடயங்கள் பற்றிக் கலந்துரையாட வேண்டியிருப்பதால் பாடசாலை அதிபர்கள் அனைவரும் தமக்குரிய நேரங்களில் தவறாது சமுகம் தருமாறு வேண்டப்பட்டுள்ளனர்.(ஐ-3-69)

## மட்டக்களப்பில் சரண்

கொழும்பு,ஒக்.16

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் பெண் உறுப்பினர் லலிதா என்பவர் படையினரிடம் சரண் அடைந்துள்ளதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

பிரஸ்தாப பெண் பண்டாரவளையில் உள்ள புனர்வாழ்வு முகாமுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3-ரி)

## செய்முறை பரீட்சைகள்

கொழும்பு.ஒக்.16

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சையில் மனையியல், அழகியல்கலை ஆகிய பாடங்களுக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளுக்குரிய செய்முறைப் பரீட்சைகள் எதிர்வரும் 31 ஆம் திகதி நடைபெறும்.

இந்தச் செய்முறைப் பரீட்சைகளுக்குத் தோற்றுவதற்கு தகுதி உடையவர்களுக்குரிய அனுமதிப் பத்திரங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டி.அமரக்கோன் தெரிவித்துள்ளார். (உ-8)

## 18 பேருக்கு பிணை அனுமதி

கொழும்பு,ஒக்.16

பதுளையில் பசறைப் பகுதியில் இடம்பெற்ற தேர்தல் வன்முறைச் சம்பவங்களின் போது பொலீஸாரால் கைது செய்யப்பட்ட பதினெட்டுச் சந்தேக நபர்களையும் பதுளை பதில் நீதிவான் உபாலி குணசேகர நேற்று பிணையில் விடுவித்தார்.

சந்தேக நபர்களை மூன்று குழுக்களாக வகுத்து ஒரு குழுவுக்கு தலா 25 ஆயிரம் ரூபா சரீரப் பிணை என்ற அடிப்படையில் அவர்கள் பிணையில் செல்ல அனுமதி வழங்கினார். (உ-8)

### கதிர்காமத்தில்

# வெடிப் பொருள்களுடன் சிங்கள இளைஞன் சரண்

கொழும்பு,ஒக்.16

கதிர்காமத்தில் வெடிப்பொருள்களுடன் சிங்கள இளைஞன் ஒருவன் படையினரிடம் சரண் அடைந்துள்ளதாக பொலீஸார் தெரிவித்தனர்.

மின்மாற்றி அல்லது தொலைத்தொடர்புக்கோபுரத்தைக் குண்டு வைத்துத் தகர்க்கும் திட்டத்துடன் இந்த இளைஞன் கதிர்காமத்துக்கு அனுப்பப்பட்டிருந்தார் என்றும்-

பிரஸ்தாப இளைஞனை இனந்தெரியாதோர் கடத்திச்சென்று குண்டு வைப்பது தொடர்பான பயிற்சிகளை வழங்கியதாகவும் -

பொலீஸார் மேலும் தகவல் வெளியிட்டுள்ளனர்.

இந்த இளைஞன் ஆலயங்களுக்கு ஆபரணப் பொருள்களை விற்கும் தொழிலை மேற்கொண்டு வந்தவர் எனக்கூறப்பட்டது.(உ-3-8)

# திருமலை - ஹபரண வீதியில் 20 கிலோ குண்டுகள் மீட்பு

திருகோணமலை - ஹபரண பிரதான வீதியில் புதைத்து வைக்கப்பட்டிருந்த - தலா இருபது கிலோ எடையுடைய - இரு கிளைமோர் குண்டுகளை நேற்றுக்காலை படையினர் மீட்டுச் செயலிழக்கச் செய்தனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

விடுமுறையில் செல்லும் படையினரை ஏற்றிக்கொண்டு இந்தப் பாதையூடாகச் செல்லவிருந்த வாகன அணியை இலக்கு வைத்து விடுதலைப்புலிகள் இந்தக் குண்டுகளைப் புதைத்து வைத்திருக்கலாம் என்று படையினர் தெரிவித்தனர்.

# ஏறாவூர், காத்தான்குடியில் பதற்றநிலை தணிகின்றது

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர், காத்தான்குடி மற்றும் ஓட்டமாவடிப் பகுதிகளில் கடந்த சில நாள்களாக நிலவிய பதற்றநிலை நேற்றுத் தணிந்து காணப்பட்டது.

இப்பகுதிகளில் மக்கள் நடமாட்டம் அதிகரித்துக் காணப்பட்டதுடன் வாகனங்களின் போக்குவரத்தும் இடம்பெற்றது.

நடந்து முடிந்த தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்ட முன்னாள் பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா தோல்வியடைந்ததைத் தொடர்ந்து அங்கு கடந்த சில தினங்களாக ஐ.தே.க ஆதரவாளர்களான முஸ்லிம்களுக்கும், முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவாளர்களுக்கும் இடையில் கலவரங்கள் இடம்பெற்று வந்தமை தெரிந்ததே. (உ-7-21)

# தேர்தலுக்குப் பின்னர் பங்குச் சந்தை சரிவு!

கொழும்பு,ஒக்.16

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தேர்தல் வெற்றிக்குப் பின்னர் கொழும்பு பங்குச் சந்தை பெரிதும் சரிந்துள்ளது.

தேர்தலுக்கு முன்னர் பங்குச் சந்தை 525.4 புள்ளியாக இருந்தது. ஐக்கிய தேசியக் கட்சி பதவிக்கு வரும் என எதிர்பார்த்து முதலீட்டாளர்கள் பங்குகளை அதிகளவில் வாங்கியதால் சந்தை மதிப்பு நாளாந்தம் உயர்ந்தது.

ஆனால் கடந்த வாரத்தில் தேர்தல் முடிவுகள் வெளிவந்து பொ.ம.ஐ. முன்னணியே வெற்றியீட்டியது என [illegible]ததும், முதலீட்டாளர்களின் ஆ[illegible]ம் குன்றியது. அதனால் கடந்த வாரத்தில் பங்குச் சந்தை 511.7 புள்ளியாக வீழ்ச்சி கண்டது. கடந்த வெள்ளிக்கிழமை பங்குச் சந்தைப் புள்ளி 509ஆக இறங்குமுகம் கண்டது. இது எதிர்வரும் நாள்களில் ஆகக் குறைந்த 500புள்ளி மட்டத்துக்கு வீழ்ச்சி கண்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

பலமான அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட்டு, அரசியல் ஸ்திரத்தன்மை உண்டாகிய பின்னரே பங்குச் சந்தைச் சரிவை நிறுத்த முடியும் என்று பொருளியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை எரிபொருள் விலை உயர்வு நடைமுறைக்கு வரும் என்றும் அதனைத் தொடர்ந்து பணவீக்கம், சம்பள உயர்வுக் கோரிக்கை என்பன தவிர்க்க முடியாதவையாகி விடும் என்றும் அதே வட்டாரங்கள் ஊகம் வெளியிட்டன. (அ)

### தானம் செய்யப்பட்ட

# சிறிமாவோவின் கண்களால் இருவர் பார்வை பெற்றனர்

கொழும்பு,ஒக்.16

கொழும்பு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்த இருவர் மறைந்த பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் இரு கண்களின் மூலம் பார்வை பெற்றுள்ளனர்.

சர்வதேச கண்வங்கியுடன் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி அவர் மறைந்ததும் அவரது கண்கள் கொழும்பு ஆஸ்பத்திரிக்குத் தானம் செய்யப்பட்டது.

அதன் மூலமே இருவர் பார்வை பெற்றனர். (உ-8)

# கண்ணீர் அஞ்சலி

**சாம்றொக் அக்கடமியில் கல்வி கற்கும் எமது சக மாணவிகளான**

செல்வி இ.சுபாசினி அவர்களின்

அன்புத்தந்தையார் **இராமநாதன் அவர்களும் மற்றும்**

செல்வி யோ. நிஷாந்தினி அவர்களின்

அன்புத்தந்தையார் **அல்பிரட் யோக்ராஜா அவர்களும்**

காலமான செய்தி அறிந்து நாம் ஆழ்ந்த கவலை அடைவதோடு அன்னார்களின் அத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**O/L மாணவ மாணவிகள்**

*சாம்றொக் அக்கடமி,*
*ஈச்சமோட்டை.*

(C/13412)

# மரண அறிவித்தல்கள்

## தர்மலிங்கம் அருளானந்தம்

**(இளைப்பாறிய களஞ்சியப் பொறுப்பதிகாரி)**

யாழ். சலமன் லேனைச் சேர்ந்த தர்மலிங்கம் அருளானந்தம் (பப்பா) நேற்று (15-10-2000) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மேரி நவமணியின் அன்புக் கணவரும், சரோ(ஜேர்மனி), எட்வேட்(இந்தியா), மனோகரன் (ஓய்வு பெற்ற சுகாதார அதிகாரி-மனேஜர், கிங்ஸ்லி தியேட்டர், கொழும்பு), அன்ரன் ரவீந்திரா (D.C.S.,திருநெல்வேலி), சாந்தி(கனடா), பெனட்(கொழும்பு), மாலா (ஜேர்மன்) ஆகியோரின் தகப்பனாரும், மூர்த்தி(ஜேர்மன்), யோகராணி (இந்தியா), பற்றிம்மா(வெஸ்லி கல்லூரி, கொழும்பு), மேரி லூட்ஸ், சந்திரன்(கனடா), கௌரி(ஜேர்மன்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (16.10.2000) திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு ஏழாலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
அன்ரன் ரவீந்திரா
60/1, சலமன் லேன்,
பழைய பூங்கா வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

*தற்காலிக முகவரி:*
*ஏழாலை வடக்கு(மத்தி)*
*ஏழாலை.*

(79523)

## சடையர் சிதம்பரநாதர்

**(ஓய்வு பெற்ற நில அளவையாளர்)**

கச்சாய் அம்மன் கோயிலடியைச் சேர்ந்தவரும் தற்போது வதிரியை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய சடையர் சிதம்பரநாதர் நேற்று (15.10.2000) ஞாயிறு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சடையர் - சின்னத்தங்கம் தம்பதிகளின் மூத்த புதல்வரும் இராசம்மா, இராசரத்தினம், பிள்ளையினார், தில்லை நடேசபிள்ளை(கனடா), சிவபாக்கியம் செல்லம்மா(கனடா) ஆகியோரின் சகோதரரும் சரோஜினிதேவியின் அன்புக்கணவரும் அகிலன் இளங்கோ ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(16.10.2000) திங்கட்கிழமை நண்பகல் 12மணியளவில் தற்போதைய இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்தஅறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
சி.சரோஜினிதேவி
(மனைவி)

'திருமகள் இல்லம்'
பார்வத்தை,
வதிரி,
கரவெட்டி.

*நிரந்தர முகவரி:*
*கச்சாய் அம்மன் கோயிலடி.*
*கச்சாய் தெற்கு,*
*கொடிகாமம்.*

(79524)


# பேரன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய யாழ். மாவட்ட தமிழ் மக்களுக்கு!



கடந்த பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு, அமோக ஆதரவை அளித்து எனக்கும் உங்கள் விருப்பு வாக்குகளைத் தந்தமைக்கு எனது பணிவன்பான நன்றிகளைக் கூறிக்கொள்கிறேன்.

குறிப்பாக இடம்பெயர்ந்து பல இன்னல்களுக்கு மத்தியில் வாழும் தென்மராட்சி மக்கள் என்னை சாவகச்சேரித் தொகுதியில் வெற்றியடையச் செய்தமைக்கு என்றும் நான் கடமைப்பட்டவனாக இருப்பேன்.

என்னாலான உதவிகளை என்றும் நான் செய்வதற்குச் சித்தமாக இருப்பேன்.

**எனது வெற்றிக்காக உழைத்த சகலருக்கும் எனது அன்பு கலந்த நன்றிகள்.**

உண்மை, நேர்மை, இலட்சியத்திற்கான அயராத உழைப்பு.

**நடராஜா இரவிராஜ்**
சட்டத்தரணியும் யாழ்.மாநகர பிரதி முதல்வரும்,
தமிழர் விடுதலைக் கூட்டணி.

*5/7/48 ஸ்ரான்லி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(C/13414)

# இந்திய ஜனாதிபதியுடன் சந்திரிகா பேச்சு நடத்தினார்

கொழும்பு,ஒக்.16

முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயகாவின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொள்ளக் கொழும்பு வந்திருந்த இந்திய ஜனாதிபதி ஸ்ரீகாந் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் நேற்றுமுன்தினம் ஒரு மணிநேரம் பேச்சு நடத்தினார்.

இருநாடுகளுக்கும் இடையிலான உறவுகள், இலங்கை நிலவரம் ஆகியவை குறித்து இருவரும் கலந்துரையாடியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புத்தகாயா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருமான வண.பத்தே ஆனந்த் தேரர் கொடுத்த தகவலின் பேரிலேயே சி.பி.ஐ. இது விடயத்தில் நடவடிக்கை எடுத்துள்ளது.

புத்தகாயா விகாரையை நிர்வகிக்கும் மகாபோதி சங்கத்தில் இலங்கையைச் சேர்ந்த பௌத்த தேரர்களும் உறுப்பினர்களாக இருக்கிறார்கள்.

விகாரையைப் புனரமைப்புச் செய்வதற்கான நிதி ஜப்பான், தாய்லாந்து ஆகிய பெரும் பௌத்த நாடுகள் உட்பட உலக நாடுகளில் இருந்து சேகரிக்கப்படுவது வழக்கம்.

இவ்வருடம் ஜூலை மாதத்தில் புத்தகாயா விகாரையின் தலைமைக் குருவும் விகாரையின் நிர்வாகச் செயலாளருமான வண.பிரஸ்ணஷீல் தேரர் நிதி சேகரிக்க ஜப்பான் சென்றிருந்த போது, வருடாந்தம் ஜப்பானியர்கள் 40 கோடி ரூபா அனுப்பிவருவது தெரியவந்திருக்கிறது. இந்தப் பணம் மகாபோதி சங்கத்துக்கு இலங்கைத் தேரர்களுக்கு அனுப்பப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. இதே போன்று மகாபோதி சங்கத்தின் உலகம் முழுவதிலுமுள்ள கிளைகள் மூலம் பலகோடி ரூபா வசூலிக்கப்பட்டுள்ளதாயினும் - இதில் ஒருசதம் கூட விகாரைப் புனரமைப்புக்கு செலவிடப்படவில்லை. புத்தகாயா விகாரைக்கு 1949ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட சட்டப்பிகாரம் நிர்வாகக்குழுவே நிதிதிரட்டவும், கோயிலைப் புனரமைப்புச் செய்யவும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. எனினும் மகாபோதி சங்கத்தைச்சேர்ந்த இலங்கை பௌத்த குருமார் போலி ஆவணங்களைத் தயாரித்தே இந்த நிதிதிரட்டி இருக்கிறார்கள் எனத் தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக விசாரணை நடத்தப்பட வேண்டும் எனக்கோரி பத்தே ஆனந்த தேரர் அறிவித்திருந்தார். அதனைத்தொடர்ந்தே சி.பி.ஐ. விசாரணைக்குழு அமைக்கப்பட்டுள்ளது. அதனால் அவர் தாம் மேற்கொள்ள இருந்த தீக்குளிப்பை ஒரு மாதத்துக்கு தள்ளிவைத்திருக்கிறார்.

இலங்கைத்தேரர்களின் மோசடி குறித்து உள்துறை அமைச்சர், ஜனாதிபதி ,பிரதமர், பிகார் முதல்வர் ஆகியோருக்கும் "பக்ஸ்" தகவல் அனுப்பியிருக்கிறார்.

இந்தியாவில் பயங்கரவாதத்தை வளர்க்க பாகிஸ்தான் ஐ.எ.ஸ்.உதவுவது போன்று இலங்கைத் தமிழருக்கெதிரான யுத்தத்திற்கு புத்தகாயாவில் இருக்கும் தேரர்கள் உதவுவதாக அந்த "பக்ஸ்" செய்தியில் பத்தே ஆனந்த தேரர் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்த நிதி திரட்டுதல் தொடர்பாக இலங்கையில் இருந்து வந்த கடிதங்கள் சிலவற்றை விகாரையின் தலைமைக் குருவான பத்தே பிரஷ்ணதீப் தேரர் வைத்திருப்பதாகவும் சொல்லப்படுகிறது. இலங்கையிலுள்ள தேரோ ஒருவர் இங்குள்ள விமலசார தேரரே மகாபோதி சங்கத்தின் செயலாளர் எனக் குறிப்பிட்டு எழுதியே பணத்தைப்பெற்று வந்ததாகவும் அறியவந்துள்ளது. ஆனால் பிரஷ்ணதீப் தேரரே உண்மையான செயலாளர் ஆவார். இலங்கையில் இருந்துவந்த கடிதங்களை உடைத்துப்பார்த்த போது பல உண்மைகள் வெளியாகியுள்ளதாகவும் ஆனந்த் தேரர் குறிப்பிடுகிறார். (அ-164)

## அமைச்சர்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சையும் கப்பல் போக்குவரத்து அமைச்சையும் இரு கட்சியினருமே கேட்பதாகவும் -

இதற்கு மேலதிகமாக வடக்கு-கிழக்கு விவகாரத்துக்கான அமைச்சையும் தமிழ்மொழி அமுலாக்கல், இந்து விவகார அமைச்சையும் ஈ.பி.டி.பி. கோருவதாகவும் -

கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

தங்களுக்கு ஒதுக்கப்படும் அமைச்சுடன் இஸ்லாமிய விவகார அமைச்சு இணைக்கப்பட வேண்டும் என்று தேசிய ஐக்கிய முன்னணி வலியுறுத்துகின்றது.

பொ.ஐ.முன்னணியில் மூன்று எம்.பிகளைக் கொண்டுள்ள இ.தொ.காவும் ஓர் அமைச்சுப் பதவியை எதிர்பார்க்கின்றது.

அதேபோல பொ.ஐ.முன்னணியில் மூன்று எம்.பிகளைக் கொண்ட மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்த்தனா விவசாய அமைச்சைத் தமக்குத் தருமாறு கோருவதாக தெரிகின்றது.

இதேபோன்று மூன்று எம்.பிகளைக் கொண்டுள்ள கம்யூனிஸ்ட் கட்சியும் முக்கிய அமைச்சு ஒன்றாவது தமது தரப்புக்குத் தரப்பட வேண்டும் என எதிர்பார்க்கின்றது.

இது தவிர,

லங்கா சமசமாஜ கட்சியின் பட்டி வீரக்கோன் மற்றும் றொனி டிமெல், விஜயபால மென்டிஸ் ஆகியோருக்கும் -

இந்தியத்தரப்பின் அழுத்தம் காரணமாக வரதராஜப்பெருமாளுக்கும்-

அமைச்சரவையில் இடங்கொடுக்க வேண்டிய நிலையில் அரசுத் தரப்பு இருப்பதாகக் கூறப்படுகின்றது.

மேலும் -

இந்தக் கட்சிகள் அனைத்தும் அமைச்சர் பதவிகளுக்கு மேலாக தங்கள் கட்சிகளுக்கு பிரதி அமைச்சர் பதவிகளையும் உரிமையுடன் எதிர்பார்ப்பதாகத் தெரிகின்றது.

இந்தச் சிக்கல்கள் காரணமாக -

எதிர்வரும் 18ஆம் திகதி புதன் கிழமை நாடாளுமன்றம் கூடி புதிய சபாநாயகர் தெரிவு இடம்பெற்ற பின்னரே புதிய அமைச்சரவை பதவியேற்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ-3)

## புலிகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

★ லெப்.கலைத்தேவி (செபமாலை மரியாள் நிர்மலா - யாழ்ப்பாணம்)

★ லெப்.ஈகைவேங்கை (பவளவேல் பக்தகௌரி - கண்டி)

கடந்த 10ஆம் திகதி அரியாலைப் பகுதியில் படையினரின் முன்னேற்ற முயற்சியின்போது லெப். குழல் (லோறன்ஸ் ஜோசவ்வின் நிஷானி - யாழ்ப்பாணம்) என்பவரும்

அதேதினம் மன்னார் கடற்பரப்பில் கடற்படையினருடன் இடம்பெற்ற மோதலின்போது மேஜர் இளம்பரிதி (அருட்சோதி உதயராசா - யாழ்ப்பாணம்), கப்டன் ஊக்கவீரன் (சிவமணி ஜெகன்மோகன்-திருகோணமலை), லெப்.அமலன் (ஸ்ரீரங்கநாதன் சதீஷ் - யாழ்ப்பாணம்) ஆகியோரும் உயிரிழந்ததாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர். (உ-7-8-ரி)

## அரசு அமைக்க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படிக் கட்சிகளின் உதவியுடன் நாடாளுமன்றத்தில் 108 எம்.பிக்களின் ஆதரவைத் திரட்டக்கூடிய நிலையில் உள்ள ஐ.தே.கட்சி -

ஐந்து எம்.பிகளைக் கொண்ட ஈ.பி.டி.பியின் ஆதரவுடன் அல்லது பன்னிரண்டு எம்.பிகளைக் கொண்ட தேசிய ஐக்கிய முன்னணியின் (பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் வெற்றியீட்டிய முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் மற்றும் பொ.ஐ.முன்னணி சார்பில்தேசியப் பட்டியலில் நியமிக்கப்படக்கூடிய முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் மூவர் உட்பட) ஆதரவுடன் புதிய அரசு ஒன்றை அமைக்கலாம் என்று கருதுவதாகத் தெரிகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி அமைக்கும் வாய்ப்பு ஏற்பட்டால் அதற்கு ஆதரவு வழங்குவது குறித்து பரிசீலிக்கத் தயாராக இருப்பதாக ஈ.பி.டி.பி. வட்டாரங்களில் கூறப்பட்டதாகவும் -

ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சி அமைக்கும் போது ஏற்படக்கூடிய பல்வேறு நெருக்கடிகளை ஈ.பி.டி.பி. தூதுக்குழு ஐக்கிய தேசியக் கட்சிக்கு சுட்டிக்காட்டியதாகவும் - தெரியவருகின்றது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தேசியப் பட்டியலில் எம்.பிகள் வரிசையில் தங்களுக்கு மூன்று இடங்கள் வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி வரும் தேசிய ஐக்கிய முன்னணி, பொ.ஐ.முன்னணியின் தேசியப் பட்டியலில் அங்கம் வகிப்போரின் விவரம் அந்த முன்னணியால் இன்று உத்தியோகபூர்வமாக தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டு, அது அங்கீகரிக்கப்பட்ட பின்னர் அரசமைப்பதற்கு எந்தத் தரப்புக்கு ஒத்துழைப்பு வழங்குவது என்பது பற்றிய திட்டவட்டமான முடிவை எடுக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. (ஒ -3)

## நாடாளுமன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்களின் பதவிப்பிரமாணம், சபாநாயகர் மற்றும் உப சபாநாயகர் தெரிவு ஆகியவை இடம்பெற்ற பின்னர் அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணை மீதான விவாதம் இடம்பெறும். (உ-3-ரி)

## இனப்பிரச்சினை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பினர்களாக கட்சியின் தலைவர் ஏ.எல்.எம்.ஹிஸ்புல்லா, மருதூர்கனி, ரிஸ்வி சின்னலெப்பை ஆகியோரை நியமிக்க வேண்டும்.

* புனர்வாழ்வு, புனரமைப்பு, கப்பல் துறை அமைச்சர் பதவியை தேசிய ஐக்கிய முன்னணிக்கே வழங்க வேண்டும் (அ-3)

## அமைச்சரவை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வித முடிவும் இதுவரை எடுக்கப்படவில்லை.

நாளைமறுதினம் நாடாளுமன்றம் கூடியபின்பே அமைச்சரவையில் இடம்பெறுபவர்கள் குறித்து முடிவு செய்யப்படும். அந்த விவரங்கள் வர்த்தமானியில் அறிவிக்கப்படும் - என்றார்.

"பௌத்த கலாசாரப்படி சத்தியப்பிரமாணம் சுபநேரம் ஒன்றிலேயே இடம்பெற வேண்டும். இன்று சுபநேரம் இல்லை" என்று அவர் தனியார் வானொலி ஒன்றுக்குத் தெரிவித்தார்.


### அறிவித்தல்

எம்மிடம் தைல வகைகள் பெற்றுக்கொள்ளும் வாடிக்கையாளர்கள் தற்போது எமது பழைய முகவரியிலேயே பெற்றுக்கொள்ளலாம்.

என்னை நேரில் சந்திப்பவர்கள் 19.10.2000 இற்கு முன்னர் சந்திக்கவும்.

**சந்திக்கும் நேரம் : காலை 8.00 - 10.00 (புதிய நேரம்)**
**மாலை 4.00 - 6.00 (புதிய நேரம்)**

**டாக்டர் இ.இலக்ஷ்மண ஐயர்**

**மங்களபதி வைத்தியசாலை**

பண்டாரக்குளம் பிள்ளையார் கோயிலடி,
நல்லூர். (79524)

### மாபெரும் மலிவு விற்பனை

எதிர்வரும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு எமது ஸ்தாபனத்தின் மாபெரும் மலிவு விற்பனை

| | ரூபா |
|---|---|
| பட்டர்சில்க், இன்ரகூலர், ஜோஜோ, பாபரா, 44"பிரின்ட் | 65.00 |
| பட்டர்சில்க், இன்ரகூலர், ஜோஜோ, பாபரா, 60"பிரின்ட் | 85.00 |
| சலஞ்சர் பிரின்ட் | 50.00 |
| சலஞ்சர் பிளேன் | 50.00 |
| ரோஸ் சில்க் சாறி | 225.00 |
| பூணம் சில்க் சாறி | 240.00 |
| லேடிசில்க் சாறி | 375.00 |
| காசிம் சில்க் சாறி | 375.00 |
| ரூபாலி சாறி | 375.00 |
| அல்னா சாறி | 375.00 |
| கனிக்கா சாறி | 375.00 |
| விமல் சாறி | 375.00 |
| ஹங்கர் சேட் | 175.00 |
| சாதாரண சேட் | 165.00 |
| ஜீன்ஸ் | 490.00 |

மலிவாகப் பெற்றுக்கொள்ள:-

**த.குமாரசாமி ரெக்ஸ்ரைஸ்ஸ்,**

**44,42, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.** (79511)

### நூல் வெளியீட்டு விழா

EASY APPROACH FOR NATIONAL CERTIFICATE IN COMPUTER APPLICATIONS (PART - I)

நூலாசிரியர்
**பாலசுந்தரம் ஜெயக்குமார்** B.Sc. (Com. Sc.)
Dip. in Tech (Com. Eng.), AMIMIS (London),
Dip. in Hardware Eng. (London), NCCA, Acp.
பகுதி நேர விரிவுரையாளர்,
(திறந்த பல்கலைக்கழகம்,
உயர்தொழில்நுட்ப நிறுவனம், IIS)

இடம்:
**IIS, Millenium Hall**

காலம்:
17.10.2000 மாலை 2.30 மணி

(C/13407)

இன்று ஆரம்பம்...!

A/L 2001
DAY CLASS (COM.)

காலை 8.00 மணி.

DMI யாழ்நகர் (C/13394)

**SUBRA (14)**
சித்தன்கேணி

SPOKEN ENGLISH
AND
GRAMMAR
By:- BRITTO

பிரிவு III
ஆரம்பம்:- 17.10.2000
(C/13393)

### நன்றி கூறுகின்றோம்



கடந்த பொதுத் தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் போட்டியிட்ட எனக்கும் எமது கட்சிக்கும் ஆதரவளித்த வாக்காளப் பெருமக்களுக்கும் இந்த நெருக்கடியான சூழ்நிலையிலும் எம்முடன் ஒத்துழைத்து உதவிகள் செய்த அனைவருக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக. தொடர்ந்தும் மக்கள் சேவையில் ஈடுபடுவேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

என்றும் உங்கள் சேவையில்
**ச.முத்துலிங்கம் J.P**
முன்னாள் உடுவில் கிராம சபைத் தலைவர்,
தமிழர் விடுதலைக் கூட்டணி.
(C/13411)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.10.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.